# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 புரட்டாதி 12 புதன்கிழமை (29-09-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 263


## கொழும்பு - யாழ். இடையே

# பயணத்துக்கு பாதுகாப்பு அனுமதி

# தேவையென சட்டம் கூறவில்லை

## குமாரின் மனு மீதான விசாரணையில் அரச சட்டவாதி நீதிமன்றில் அறிவிப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 29

''கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே விமானம் மற்றும் கப்பல் மூலம் பயணத்தை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவையென எந்தச் சட்டத்திலும் கூறப்படவில்லை''

சட்டமா அதிபர் திணைக்கள சிரேஷ்ட சட்டத்தரணி புவனேச அலுவிகார மேற்கண்ட விடயத்தை உயர் நீதிமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வடக்கே யாழ். செல்வதற்கான பயணத்துக்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற வேண்டும் என வலியுறுத்துவது சட்டவிரோதமானது என்று தெரிவித்து சிரேஷ்ட சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் சார்பாக உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்று அண்மையில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா மற்றும் நீதியரசர்களான டி. பி. எஸ். குணசேகர, அமீர் இஸ்மாயில் ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நேற்று எடுக்கப்பட்டது.

அங்கு தமது தரப்பு வாதத்தை எடுத்து விளக்குகையிலேயே அரச சட்டத்தரணி பிரஸ்தாப விடயத்தை நீதியரசர்கள் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

குமார் பொன்னம்பலம் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சிவராசா தமது வாதத்தையும் தெரிவித்தார்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கந்தளாயில் தாக்குதல் நான்கு படையினர் உயிரிழப்பு

திருகோணமலை, செப் 29

திருகோணமலை மாவட்டம் கந்தளாய் கல்லூறு பகுதியில் கரும்புத் தோட்டத்தில் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்றுக் காலை 7 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இந்த தாக்குதலில் படையினர் நால்வர் உயிரிழந்தனர் என்றும்—

படையினர் இருவர் காயமடைந்தனர் என்றும்—

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

தாக்குதல் சம்பவத்தைத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் ஜனாதிபதியானால் போரை நிறுத்த முன்னுரிமை

### காலிக் கூட்டத்தில் அவரே தகவல்

கொழும்பு, செப். 29

''ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் வடக்கு — கிழக்கு யுத்தத்தை நிறுத்துவதே எனது முன்னுரிமைப் பணியாக இருக்கும்'' என்று ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காலியில் ஐ. தே. க. அலுவலகம் ஒன்றை நேற்று மாலை திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

'ஜனாதிபதியாக நான் பதவியேற்கும் பட்சத்தில் வடக்கு — கிழக்கு யுத்தத்தை நிறுத்துவதற்கு முன்னுரிமை அளிப்பேன். அத்துடன் விடு

(10ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு புலிகள் உயிரிழப்பு

வவுனியா, செப். 29

ஒட்டுசுட்டான் மற்றும் மணலாறு பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரு வேறு சம்பவங்களில் தமது தரப்பில் 4 பேர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

ஒட்டுசுட்டானில் படையினருடன் ஏற்பட்ட திடீர் மோதலின் போது மேஜர் அபிசா (பத்மநாதன் மலர்விழி— யாழ்ப்பாணம்) என்பவரும்—

மணலாறில் ஏற்பட்ட மோதலின்போது இளவேனில் (தேவராசா மஞ்சுளா—மட்டக்களப்பு), சாந்தினி (கோபாலன் ஜெயமதி—கிளிநொச்சி) ஆகியோரும் —

மணலாறில் தவறுதலாக இடம்பெற்ற வெடிவிபத்து ஒன்றில் சிக்கி சதீஷ் அல்லது மகிழன் (சின்னத்தம்பி ஜெராட் —யாழ்ப்பாணம்) என்பவரும் —

உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(உ-7)

## பயணிகள் கப்பல் சேவை இன்னும் முடிவில்லையாம்!

யாழ்ப்பாணம், செப். 29

''லங்கா முடித்த'' கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் அவ்வப்போது நடைபெறும் பயணிகள் கப்பல் சேவையை அடுத்து எப்போது நடத்துவது என்பது குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை'' — என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார்.

பாதுகாப்புத்தரப்பு அனுமதி இன்னமும்கிடைக்காதமையே இதற்குக் காரணம் எனத் தெரிபவருகின்றது.

இந்தச் சேவையை நடத்துவதற்கு பயணிகளுக்கு உரிய

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட மாணவன் நேற்றுக்காலை விடுவிப்பு

யாழ்ப்பாணம், செப். 29

இனந்தெரியாதவர்களினால் நேற்று முன்தினம் காலை சைக்கிளில் கடத்திச் செல்லப்பட்ட மாணவன் ஒருவன் நேற்றுக்காலை விடுவிக்கப்பட்டுள்ளான்.

யாழ் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த எல்லாளசிங்கம் ஜெயதீபன் (வயது 15) என்ற மாணவனே இவ்வாறு கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டான்.

இச்சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்துக்கு மேற்படி மாணவன் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

காலை 7 மணியளவில் நான் 'டியூசன் வகுப்புக்குச் சென்று திரும்பும் போது ஆறுகால் மடம் பகுதியில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஐ. நா. தலையிடத் தேவையில்லை

### நியூயோர்க்கில் கதிர்காமர் தெரிவிப்பு

நியூயோர்க், செப். 29

''இலங்கை இனப்பிரச்சினை உள்நாட்டு விவகாரம். அதில் ஐ. நா. உட்பட எந்தவொரு தரப்பினரும் தலையிட வேண்டிய அவசியம் இல்லை.''

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இப்படி உறுதியாகக் கூறியுள்ளார்.

ஐ. நா சபையின் கூட்டத் தொடரில் பங்குபற்றுவதற்காக நியூயோர்க் வந்துள்ள அவர், இங்கு நேற்று செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையிலே மேற்கண்டவாறு கூறினார்.

இனப்பிரச்சினை விவகாரத்தில் உடனடியாக இல்லாவிட்டாலும் கூடிய விரைவில் ஐ. நா. மத்தியஸ்தம் வகிக்கும் சாத்தியம் உண்டா? என செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு அளித்த பதிலில்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞன் கைது

யாழ்ப்பாணம், செப். 29

யாழ். மின்சார நிலைய வீதியில் உள்ள கடை ஒன்றில் வைத்து இளைஞன் ஒருவன் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் உறவினர்களினால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூத்தவிநாயகர் வீதி, நல்லூரைச் சேர்ந்த தேவநாய

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடிப்பு

கொழும்பு, செப். 29

புறக்கோட்டை மலிபன் வீதிச் சந்தியில் அமைந்துள்ள மின்மாற்றி 'பியூஸ்' பெட்டியில் பொருத்தப்பட்டிருந்த குண்டு ஒன்று நேற்று முன்தினம் இரவு வெடித்துள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பால் பெரும் சேதம் ஏற்படவில்லை எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

(உ-3)

## மன்னார் அரச அதிபர் 3 மாத தடுப்புக் காவலில்!

கொழும்பு, செப். 29

மன்னார் அரச அதிபர் எஸ் எம். குறூஸை நேற்று முன்தினம் முதல் மேலும் மூன்று மாதங்களுக்கு தடுத்து வைத்து விசாரிக்க பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது என்று பொலீஸ் தலைமையக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 4 ஆம் திகதி கைது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் தேடுதல் தீவிரம்

கொழும்பு, செப். 29

பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தும் நோக்குடன் விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளனர் என்று கிடைத்த புலனாய்வுத் தகவலை அடுத்து தெற்கில் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மருதானைப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டு 216 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும்—

களுத்துறை நகரப் பகுதி அதே தினம் சுற்றிவளைக்கப்பட்ட சமயம் 25 தமிழர் கைது செய்யப்பட்டனர் என்றும்—

பொலீஸார் மேலும் தெரிவித்தனர்.

(உ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எமது வாழ்த்துக்கள்

சிறந்த சமூக சேவையாளரும்
கடந்த 12 வருட காலமாக எமது நிலையத்தின்
செயலாளராகப் பணிபுரிந்து வருபவரும்
17-09-1999 இல் சமாதான நீதிவானாகப் பதவி
ஏற்றிருப்பவருமான



## திரு. சண்முகம் ஏகாம்பரநாதன்

அவர்களை எமது நிலைய உறுப்பினர்கள் அனைவரும் நீடூழி வாழ்கவென மனமார வாழ்த்துகின்றனர்.

வாழ்த்துவோர்;
தலைவரும் செயற்குழு உறுப்பினர்களும்
கணேசா சனசமூக நிலையம்,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

[69446]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நீலாம்பிகை நாகராஜா

(முன்னாள் உப அதிபர், யா/புனித ஜோண் பொஸ்கோ வித்.)

சரவணையைப் பிறப்பிடமாகவும், 93 A, கண்டி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நீலாம்பிகை நாகராஜா அவர்கள் 27-9-99 அன்று பிரான்ஸில் காலமானார்.

இவர் ஆறுமுகம் நாகராஜா (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்புமனைவியும், சரவணையைச்சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம் - பாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மகளும், செந்தில்ராஜன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), கோகுலராஜன் (விவசாய போதனாசிரியர். வவுனியா), யோகநந்தினி (பிரான்ஸ்), யோகராஜன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வித்தியா (பொறியியலாளர்), நளாயினி (ஆசிரியை), மகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தற்பரானந்தம், கனகரத்தினம், இராசரத்தினம், காலஞ்சென்ற புருசோத்தன், நாகேஸ்வரி, காலஞ்சென்ற பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
தற்பரானந்தம்
[சகோதரன்]

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.
(69455)

## திருமதி செல்லக்கண்டு வள்ளிநாயகி

( ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை )

பொலிகண்டி கிளானையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி செல்லக்கண்டு வள்ளிநாயகி அவர்கள் 27-09-99 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராசா — பொன்னம்மா தம்பதிகளின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற செல்லக்கண்டு ஆசிரியரின் அன்பு மனைவியும் இராசநாயகி, கணேசலிங்கம் ( ஜப்பான் ), விக்னேஸ்வரி (ஆசிரியை, யா/ வல்வை றோ.க.த. பாடசாலை), செல்வநாயகி (சுவிஸ்), விநாயகலிங்கம் (சுவிஸ்), சிவலோகேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் வீ. சிவஞானசுந்தரம் [தேசிய வீடமைப்பு அதிகார சபை, மன்னார்], கு. தவராசா [பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்], ஐ. தவராசா [சுவிஸ்], வி. கலாரஞ்சனி [சுவிஸ்], சாந்தகுமார் [ஜேர்மனி], திருமதி கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான செல்லக்கண்டு, திரவியம், தங்கவேலாயுதம், சுப்பிரமணியம் மற்றும் கந்தவனம் [C. T. B. சாரதி, பருத்தித்துறை], கிருஸ்ணசாமி, வேலும்மயிலும் [உடுப்பிட்டி அ. மி பாடசாலை - ஆய்வு கூட உதவியாளர்] ஆகியோரின் அன்புச் சகோதரியும் விக்னராஜ், செந்தூரன், நிஷாந்த், நிவேதினி, நிலானி, சங்கீத், விதுஷா, நிதுஷா, சங்கவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை [30-09-99] வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. தவராசா
[மருமகன்]

கிளானை,
பொலிகண்டி.
[சி/9118]

## களுத்துறையில் கைதிகள் கைகலப்பு

கொழும்பு, செப். 29

களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ள தமிழ்க் கைதிகளிடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற கைகலப்பு ஒன்றில் 15 பேர் காயமடைந்தனர்.

கைதிகளிடையே கடந்த பல மாதங்களாக நிலவி வந்த கருத்து முரண்பாடே கைகலப்புக்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-7-8)

### இனப்பிரச்சினைத்...

(முதலாம் பக்கத் தொடர்)

''இனப்பிரச்சினைத் தீர்வில் ஐ. நா. அமைப்பின் மத்தியஸ்தம் தேவை என நாம் கருதவில்லை. எனவே எவரும் அத்தகைய பங்கு வகிக்க வேண்டிய அவசியம் இல்லை'' என்று சொன்னார்.

எந்தவொரு உள்நாட்டு விவகாரத்திலும் ஐ. நா. அமைப்பு தலையிடுவதை எம்மில் பலரும் விரும்பவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார். (உ-3-7)

### இளைஞன்...

[முதலாம் பக்கத் தொடர்]

கம் றொனால்ட் தேவசுதன் (வயது 24) என்ற இளைஞனே கைது செய்யப்பட்டவனாவான்.

நேற்றுக்காலை அவர் கடையில் வேலை செய்து கொண்டிருந்த சமயம் அங்கு வந்த படையினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9-ரி)

### ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்)

தலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பேன்.

''யுத்தத்தை நிறுத்த சகல கட்சிகளும் அங்கம் வகிக்கக் கூடிய தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கவும் தயாராகவுள்ளேன்.

'எவ்வாறாயினும் யுத்தத்தை நிறுத்த முழு அர்ப்பணிப்பையும் சகல தரப்புக்கும் வழங்குவேன்'' — என்றார். (உ-3)

### கந்தளாயில்...

[முதலாம் பக்கத் தொடர்]

தொடர்ந்து அந்தப் பகுதிக்கு மேலதிக துருப்பினர் அனுப்பி வைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம்—

ரோந்து சென்றபடையினர் மீது தாக்குதல் நடத்திய பின்னர் அந்தப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம் மீதும் தாங்கள் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதாக புலிகள் அறிவித்துள்ளனர். (உ-3-7-க)


எமது புதிய
ஓடியோ CD
வெளியீடுகள்!

உனக்காக
எல்லாம் உனக்காக

நேசம் புதுசு

மெலோடியஸ்
மியூசிக்

303, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[சி/9119]



வீடியோ CD
வெளியீடு!

ஜோடி
பிரதிகள்
பெற்றுக்கொள்ளலாம்.

ஆர்க்
விடியோ லைபிறறி
அம்மன் வீதி.
(69456)


### கடத்தப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்)

வைத்து சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர் கீழே இறங்கி என்னைக் குண்டுக்கட்டாக தூக்கிச் சைக்கிளில் ஏற்றிச் சென்றார்கள்.

ஒரு பழைய வீட்டிற்கு என்னைக் கொண்டு சென்ற அவர்கள் அவ்வீட்டில் உள்ள கதிரையில் என்னைக் கட்டி வைத்தனர்.

இரவு முழுவதும் நான் கதிரையில் கட்டப்பட்டிருந்தேன். கடத்தி வந்த இருவரும் என்னருகில் இருந்தனர். பின்னர் காலையில் எனது கட்டுக்களை அவிழ்த்து விட்டு எனது புத்தகப் பையைப் பறித்து வைத்து வீட்டிற்குச் சென்று காசு வேண்டி வருமாறு அனுப்பினார்கள்.

இவ்வாறு அந்த மாணவன் தெரிவித்துள்ளான்.

இந்த மாணவன் கடத்தப்பட்டதற்கான காரணத்தை அறியமுடியாத நிலையில் உறவினர்கள் குழப்பமடைந்துள்ளனர். [உ-5]

### பயணத்துக்கு...

[முதலாம் பக்கத் தொடர்]

இதை அடுத்து குமாரின் மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதியரசர்கள் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு விசாரணை ஒத்திவைத்தனர். [உ-3]

### மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்)

செய்யப்பட்ட அரச அதிபர் ஒவ்வொரு வார தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் கடந்த மூன்று வாரங்கள் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டார் என்றும்—

அவரை மேலும் விசாரிக்க வேண்டியுள்ளதால் தற்போது 3 மாதகால தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளது என்றும் —

அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (உ-3-8)

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், செப். 29

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியின் மூத்த அதிபர் வி. சிவசுப்பிரமணியத்தின் மூன்றாவது ஞாபகார்த்த நினைவுப் பேருரை வைபவம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் கந்தையா உபாத்தியார் நினைவு மண்டபத்தில் அதிபர் க. சிவாஜி தலைமையில் இடம்பெறவுள்ளது.

''பாடசாலை முகாமைத்துவத்தில் அதிபர்களின் பங்கு'' என்னும் தலைப்பில் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா நினைவுப் பேருரை ஆற்றுவார். [உ-3-7]

## கிளின்ரன் மௌன விரதம்

வாஷிங்ரன், செப். 29

தொடர்ந்து 10 நாள்களுக்கு பேச வேண்டாம் என்று அமெரிக்க அதிபர் கிளின்ரனை அவரது வைத்தியர்கள் கேட்டுள்ளனர்.

கிளின்ரனுக்கு ஏற்பட்ட சிறு சுகயீனமே இதற்குக் காரணம் ஆகும்.

5 மணித்தியாலங்கள் அவர் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். (இ-க)

### பயணிகள்...

[முதலாம்பக்கத் தொடர்]

டிக்கெட்டுக்கள் முன்கூட்டியே வழங்கப்பட்டிருந்தன என்றும்—

பயணம் தாமதமாவதால் வேறு மார்க்கமாக செல்ல விரும்பும் பயணிகள் யாழ். செயலகத்தில் தமது டிக்கெட்டை ஒப்படைத்து உரிய பணத்தை மீளப் பெறலாம் என்றும் — அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (உ-3)


எப்போது ஆரம்பமாகும் எனக் காத்திருந்த
மாணவர்களே

A/L 2000 கலை-வர்த்தகம்
DAY CLASS

(A/L 99 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு.
ஆரம்பம்:- 4-10-99 திங்கள் 9-00 a. m. (ப.நே)

பொருளியற் கல்லூரி நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(69437)


## வாழ்த்துகின்றேன்

சமாதான நீதிவானாகப் பதவி பெற்ற எனது மாணவன்
வதிரி திரு. ச. இரத்தினசேகரன்
அவர்களை மனமார வாழ்த்துகின்றேன்.

சி. திரவியம்

''செல்வம் பூங்கா''
அல்வாய்.
(69443)

## கண்ணீர் அஞ்சலி

எமது வகுப்பு மாணவிகளான
செல்விகள் தஞ்சுகி, சுபர்ணா
ஆகியோரின் அன்புத் தந்தையார்

### அ. சோதிலிங்கம்

அவர்கள் இயற்கை எய்திய செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபங்களை அவர்கள் குடும்பத்திற்கு தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2000 ஆம் ஆண்டு கலைப்பிரிவு
மாணவர்கள்

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
(69452)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29-09-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பரஞ்சோதி ஐயாத்துரை

(ஆசிரியை, சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி)

திருமதி பரஞ்சோதி ஐயாத்துரை அவர்கள் 27-9-99 திங்கட்கிழமையன்று கர்த்தருக்குள் மகிமையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வி. என். ஐயாத்துரை (இளைப்பாறிய உப அதிபர், சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் திரு. திருமதி டி.கே. சின்னத்தம்பியின் அன்புப் புதல்வியும் ஜோதிமலர், ஜோதிதாஸ், கிருபைமலர், கிருபைதாசன், ஞானதாசன், தங்கமலர் ஆகியோரின் அருமைத் தாயாரும் மகேந்திரன், ஜெபராணி, டாக்டர் டேவிட், மைதிலி ஆகியோரின் அருமை மாமியாரும் காலஞ்சென்ற சாந்தம்மா, நாகலிங்கம், எஸ். பி.சற்குணன், ஞானம்மா. ஐயாத்துரை, கிருபை கென்ஸ்மன் ஆகியோரின் அருமைச் சகோதரியும் சகுந்தலா, விமலேந்திரன், சுபேந்திரன், சர்வேந்திரன், அருண், அவந்தி ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை டிக்மன்ஸ் வீதி, இல 4, ஈபேர்ட் இடம், கொழும்பு-5 இல் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (29-9-99) புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற்றுப் பிற்பகல் 5. 30 மணிக்கு கனத்தை பொது மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் 6. 30மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ. ஞானதாசன்

இல 4, ஈபேர்ட் இடம்,
கொழும்பு-5.
தொலைபேசி இல: 590833

(சி/9119)

## சின்னத்தம்பி வன்னியசிங்கம்

(குரும்பசிட்டி)

சின்னத்தம்பி வன்னியசிங்கம் (தபாற்திணைக்கள இளைப்பாறிய இலிகிதர்) கடந்த 24ஆம் திகதி கொழும்பில் காலமானார்.

அன்னார் வனிதாவின் அன்புக்கணவரும் துரைசிங்கம் (ஆஸ்திரேலியா), தனபாலசிங்கம் ஆகியோரின் தகப்பனாரும் கனகசுந்தரம், தங்கம்மா, காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், தங்கம்மா, தற்பராசசக்தி ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26-10-99 அன்று கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. யோகராசா
[மருமகன்]

(69453)

## திருமதி வைரவநாதன் மனோன்மணி

திருமதி வைரவநாதன் மனோன்மணி அவர்கள் 23-09-99 அன்று Boston, U.S.A இல் காலமானார்.

அன்னார் திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற S தில்லையம்பலம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்ற Gate முதலியார் வை. பொன்னம்பலம் - தையலம்மாள் தம்பதிகளின் அன்புமருமகளும்முருகேஷ், கௌசல்யா, இந்திராதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் காளி இராமச்சந்திரனின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25-09-99 அன்று Boston, U.S.A இல் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி முகுந்தினி சிவபாதம்
(மருமகள்)

சாவகச்சேரி.

(69440)

## அம்பலவாணர் சோதிலிங்கம்

(உரிமையாளர், கஜமுகா வெற்றிலைக் கடை)

புங்குடுதீவு 6 ஆம்வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும் கொட்டடி சிவன் பண்ணை வீதியைச் சேர்ந்தவருமான அம்பலவாணர் சோதிலிங்கம் அவர்கள் நேற்று 28-9-99 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் — செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பியையா—தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாநிதியின் அன்புக் கணவரும் மதீசன் (பிரான்ஸ்), தஞ்சுகி, சுவர்ணா, சோபிகா (யா/வைத்தீஸ்வராக் கல்லூரி, மாணவிகள்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகேஸ்வரி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற செல்வரெத்தினம், நல்லையா, செல்லத்துரை, பாலசுந்தரம், நல்லதம்பி, பொன்ராசா, கந்தசாமி, இரத்தினராசா, இரத்தினகோபால், சரஸ்வதி, யோகாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும் குணலிங்கம், சிவநேசன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-9-99) புதன்கிழமை முற்பகல் 11. 00 மணியளவில் சிவன் பண்ணை வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சோ. கமலாநிதி
[மனைவி]

33, சிவன்பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(69454)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 29

21ஆம் நூற்றாண்டை எதிர் நோக்கிய கண்காட்சி ஒன்று இன்று புதன்கிழமை காலை 9-00 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் இடம்பெற உள்ளது. [உ-7]

## அதிபர்கள் கூட்டம்

உடுவில் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று புதன்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் அறிவித்துள்ளார். [உ-7]

## சரஸ்வதி சிலை பிரதிஷ்டை

இருபாலை எக்ஸ்பிரஸ் கல்வி நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலையின் பிரதிஷ்டையும், பொங்கல் விழாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 6 30 மணி முதல் நடைபெறவுள்ளன.

பிரஸ்தாப கல்வி நிலைய ஆசிரியர் பண்டிதர் கு. துரைராஜாவினால் வடிவமைக்கப்பட்ட சரஸ்வதி சிலையினை சிவஸ்ரீ வரதராஜக்குருக்கள் பிரதிஷ்டை செய்து வைப்பார். (உ-7)

## திருத்தம்

28-09-99 ஆம் திகதி உதயன் பத்திரிகையின் இரண்டாம் பக்கத்தில் வெளிவந்த திருமதி கற்பகப்பிள்ளை பொன்னம்பலம் என்பவரின் மரண அறிவித்தலில் அவரின் மகன் அம்பலவாணர் (பங்காளர், நஷனல் மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்) அவர்களின் பெயர் தவறுதலாக விடுபட்டுவிட்டது அதனையும் சேர்த்து வாசிக்கவும் (ஆ-ர்)


SPOKENENGLISH
and
GRAMMAR
by: BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்:
02 - 10 - 1999
Sat. 8-00 a. m.
727, K. K. S. ROAD,
JAFFNA.
(யாழ்.இந்துவுக்கு அருகில்)
(69458)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
விஜய் - ரம்பா
நடித்த
மின்சாரக்கண்ணா
காட்சிகள்: 10-30, 2-30
T.P No. 070-212223
(69290)

நாகம்ஸ்
சுன்னாகம்
சரத்குமார் - வினித்தா
சுகன்யா - கவுண்டமணி
நடித்த
மகாபிரபு
காட்சிகள்: 11-00, 2-30
(புதிய நேரம்)
(69365)

ராஜா
யாழ்ப்பாணம்
இன்று முதல்
ரஜனி - குஷ்பு
மற்றும் பலர் நடித்த
பாண்டியன்
10-30, 2-30,
(இ/9101)

வீடு விற்பனைக்கு
இலக்கம் 41/1 A, ஈச்சமோட்டை வீதி, சுண்டிக்குளியில் சகல வசதிகளும் உள்ள 1½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
நேரில் தொடர்பு கொள்ளவும்.
சு. செல்லத்துரை
C/O நா. ஞானப்பிரகாசம்
44/3, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம்.
(69444)


## முதலாம் வருட நினைவஞ்சலி

### திருப்பலி

தோற்றம்
18
—
10
—
1933



மறைவு
04
—
10
—
1998

**ஸ்ரெலா பிறெட்றிக்**

(இளைப்பாறிய ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர் மடம்)

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக நாளை (30-9-99) காலை 8.30 மணிக்கு யாழ்/அடைக்கலமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இத்திருப்பலியில் பங்குபற்றி அன்னாரின் ஆன்ம சாந்திக்காகச் செபிக்கும்படி உங்களை அழைக்கின்றோம்.

அருட்திரு அன்ரன் தேவறாஜ் அ.ம.தி.

(சி/9117)

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண அழைப்பு



செல்வன்

**நடராசா சிவாகரன்**

(பூதர் வளவு, அச்செழு)

தோற்றம் 07 - 12 - 1981 — மறைவு 30 - 08 - 1999

29 09-1999

அச்செழு பூதர்வளவைச் சேர்ந்த திரு. திருமதி வேலுப்பிள்ளை நடராசா தம்பதிகளின் மூன்றாவது புதல்வன் சிவாகரன் 30—08—99 அன்று சிவபதம் அடைந்தார்.

இன்று 29—09—99 புதன்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண வைபவத்திலும் மதிய போசனத்திலும் தாங்கள் குடும்ப சமேதராய் வந்து கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் பணிவுடன் வேண்டுகின்றோம்.

வே. நடராசாவும் பாரியாரும் பிள்ளைகளும்,
பேர்த்தியார் கனகசபை செல்லாச்சிப்பிள்ளை,
குடும்பத்தினர்.

பூதர்வளவு, அச்செழு.

[69442]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெக்சிக்கோ குண்டு வெடிப்பில் 56 பேர் வரை உயிரிழப்பு!

மெக்சிக்கோவில் நேற்று முன்தினம் கிடங்கு ஒன்றில் நிகழ்ந்த தொடர் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 56 பேர் உயிரிழந்தனர். 300க்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

உடனடியாக மீட்புப் பணியாளர்கள் அழைக்கப்பட்டு மீட்பு வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனினும் மேலும் பலர் இடிபாடுகளுக்கு இடையே சிக்கியிருப்பதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குண்டு வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து அருகில் உள்ள உணவு விடுதிகளின் சமையல் வாயு டாங்கிகளும் வெடித்துச் சிதறியதாலேயே அதிகளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. (இ-க)

## கிழக்குத் திமோரின் பாதுகாப்பு ஐ. நா. அமைதிப்படையினர் வசம்

### இந்தோனேசியப் படை திமோரை விட்டு வெளியேற்றம்

டிலி, செப். 29

கிழக்குத் திமோரில் இருந்து இந்தோனேசிய இராணுவம் வெளியேறியதை அடுத்து கிழக்குத் திமோரின் பாதுகாப்புப் பொறுப்பை இந்தோனேசியப் படைகள் ஐ. நா. அமைதிப் படையிடம் கையளித்துள்ளன.

தலைநகர் டிலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பாதுகாப்புப் பொறுப்புக்கள் அனைத்தும் ஐ. நா அமைதிப் படையின் தலைவர் மேஜர் ஜெனரல் பீற்றர் கார்ஸ் குரோஸிடம் கையளிக்கப்பட்டன.

**உலக அரங்கில்**

கிழக்குத் திமோரின் பாதுகாப்புத் தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் இனிமேல் ஐ. நா அமைதிப் படையே பொறுப்பு என இந்தோனேசிய இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டதை அடுத்து ஐ. நா அமைதிப்படையினர் கிழக்குத் திமோரில் உள்ள இந்தோனேசிய ஆதரவு ஆயுத பாணிகள் மீது நடவடிக்கை எடுக்கத் தொடங்கியுள்ளனர்.

தலைநகர் டிலியில் இந்தோனேசிய ஆதரவுப் படையினரின் மறைவிடம் ஒன்றின் மீது நேற்று திடீர் தாக்குதல் நடத்திய ஐ. நா அமைதிப் படையினர் அங்கிருந்த 15 இந்தோனேசிய ஆதரவுப் படையினரைக் கைது செய்துள்ளனர்.

அதேசமயம் டிலிக்கு மேற்கில் அமைந்துள்ள இந்தோனேசிய ஆதரவுப் படையினரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலை ஒன்றின் மீது ஐ நா. அமைதிப் படையினர் தேடுதல் ஒன்றை நடத்தினர்.

இதனை அடுத்து அங்கு ஒளிந்திருந்த இந்தோனேசிய ஆதரவுப் படையினர் தப்பி ஓடி விட்டதாகவும் —

ஆஸ்திரேலிய ஹெலிக்கொப்டர்களில் சென்று திடீரென இறங்கிய அமைதிப் படையினர் தேடுதல்களை நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-6-க)

**தமிழ்நாட்டுப் பெண்கள்**

## கூட்டாட்சி, தனிக்கட்சி ஆட்சி என்பவற்றுக்கு சம அளவு ஆதரவு

இந்தியாவில் மத்திய அரசில் கூட்டாட்சியா? அல்லது தனிக்கட்சி ஆட்சியா? என்பதற்கு தமிழ்நாட்டுப் பெண்களிடம் சம அளவு ஆதரவு இருப்பதாக ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

தமிழ் நாடு காரைக்குடியில் உள்ள அழகப்பா பல்கலைக்கழக மாணவிகள் இந்த ஆய்வினை நடத்தி உள்ளனர். ''சிவகங்கை மாவட்டத்தில் பெண்களின் அரசியல் உணர்வும் செயல்பாடும்'' என்ற தலைப்பில் இந்த ஆய்வு இடம்பெற்றது.

மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டப் பேரவைத் தொகுதிகளிலும் உள்ள 300 பெண்களிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வில் இருந்து தெரியவந்துள்ளதாவது:-

தனிக்கட்சி ஆட்சி என்றால் தலைவர்களிடையே பிரச்சினைகள் இருக்காது என ஒரு கட்சி ஆட்சியை ஆதரிப்போர் கருதுகின்றனர்.

கூட்டாட்சியில் தீர்மானங்களை பலர் சேர்ந்து எடுப்பதால் நல்ல பயனை அளிக்கும் என கூட்டாட்சியை ஆதரிப்பவர்கள் தெரிவிக்கின்றனர்.

நகர்ப்புறப் பெண்கள் நாட்டின் அரசியல் குறித்து அதிகம் அக்கறை காட்டவில்லை.

மாநிலக் கட்சிகளின் பெயர்களையே பெண்கள் அதிகம் தெரிந்து வைத்துள்ளனர்.

திராவிடக் கட்சிகளை 85 சதவீதத்தினரும் தேசிய கட்சிகளில் காங்கிரஸ் கட்சியை 75 சதவீதத்தினரும் பாரதீய ஜனதாக் கட்சியை 65 சதவீதத்தினரும் தெரிந்து வைத்துள்ளனர்.

கட்சியின் பெயரைவிட சின்னத்தையும் தலைவர்களின் பெயரையும் அறிந்துள்ள பெண்கள் அதிகமாக உள்ளனர்.

தமது ஊராட்சித் தலைவர் பெயரை 92 சதவீதத்தினரும் தமது சட்டப் பேரவை உறுப்பினர் பெயரை 48 சதவீதத்தினரும் தெரிந்து வைத்துள்ளனர்.

பெண்களில் சுமார் 60 சதவீதத்தினர் ஏதாவது ஓர் அரசியல் கட்சியின் அனுதாபியாக உள்ளனர்.

27 சதவீதமான பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு ஆர்வமாக உள்ளனர்.

எனினும் குடும்பச் சூழல், சுதந்திரமின்மை, உரிய சமூக அந்தஸ்து இல்லாமை, ஆண் ஆதிக்கம் போன்றவை பெண்கள் அரசியலில் ஈடுபடத்தடையாக உள்ளன என பெண்கள் கருதுகின்றனர்.

அடிக்கடி தேர்தல் வருவதை 82 சதவீதப் பெண்கள் விரும்பவில்லை. (இ-6-8)

## நேற்று மறுவாக்களிப்பு

இந்திய நாடாளுமன்றத் தேர்தல்களில் கடந்த சனிக்கிழமை வாக்களிப்பு இடம்பெற்ற 530 நிலையங்களில் நேற்று மறுவாக்குப் பதிவு இடம்பெற்றது.

மேலும் 29 நிலையங்களில் இன்று மறுவாக்குப் பதிவு இடம்பெற உள்ளது.

உத்தரப் பிரதேசம், மத்திய பிரதேசம். பீஹார் ஆகிய மூன்று மாநிலங்களில் உள்ள 530 நிலையங்களிலேயே நேற்று மறு வாக்குப்பதிவு இடம்பெற்றது,

நாகாலாந்தில் உள்ள 29 நிலையங்களில் இன்று மறுவாக்குப் பதிவு இடம்பெறும். (இ-6)

---


யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

# முன்னாள் அதிபர் திருமதி ச. சுந்தரலிங்கம் அவர்களின் பிரிவுபசார விழா

**29-09-99**



### எங்கள் தரிசனத்தில் அதிபர்

வடமராட்சிக் கல்வி வலயத்திலே கரவெட்டிப் பிரதேசத்துக்கென ஒரேயொரு பெண்கள் பாடசாலை வடமராட்சி மகளிர் கல்லூரி மட்டுந்தான். ஒரு தசாப்தத்தைக் கூடத் தாண்டாது மலராமல் மலர்ந்து வளர்ந்து வரும் எமது கல்லூரிச் சேயை முட்டச் சிறகணைத்து வளர்த்த தெய்வீக அன்னை எமது அதிபர்.

கருக்கொண்ட நாள்முதல் அகமும் புறமும் உருவான அனைத்துக் காரணிகளையும் இனங்கண்டு புத்திஜீவிகளது ஆத்மராகங்களின் உதவியோடு தமது இலட்சியப்பயணத்திலே வெற்றி கண்டவர் எங்கள் முதல்வர். இசைப் பூக்களையும் வசைக் கற்களையும் ஒரு பொருட்டாகவே அவர் மதிக்கவில்லை.

எமது கல்லூரியினது வரலாறும் எங்கள் முதல்வரின் நிர்வாக வரலாறும் ஒன்றிவிட்ட சத்திய சோதனைதான். கல்லூரியையே குழந்தையாக வளர்த்தெடுத்த அன்னை கல்லூரித் தாயை கலைத்தாயாகவும் அன்னை பராசக்தியாகவும் நாளும் பொழுதும் வழிபட்டு வந்தவர் என்பதை நாடறியும்.

கல்லூரியில் மாணவர் நலனை முதன்மைப் படுத்தி அவர் முன்னெடுத்த கல்வியியல் சார் விழுமியம் அனைவரும் பின்பற்ற வேண்டிய அற்புதமான நிருவாகக் கோட்பாடு. அவரது ஆத்மா, உடல் இரண்டையுமே கல்லூரிக்காக அர்ப்பணித்துவிட்டு ஓடியாடித் தன் கருமம் பார்க்கும் அவர் தோற்றம் எவர் உள்ளங்களையும் உருக்கி நிற்கிறது. அவர் தொடக்கி வைத்த மரபு செழித்து வளர, அவர் இலட்சியங்கள் மலர நாம் ஒன்று பட்டு உழைப்பதே அவருக்கு நாம் செய்யும் செய்ந்நன்றிக் கடனாகும். வகுத்த வழி எல்லைக் கோட்டை 30-08-99 என எழுதி விட்டது. வாத்சல்யம் தாங்குமா? சாந்தம் பொறுக்குமா? அனைத்தும் சிறக்க ஆண்டவனை இறைஞ்சி அமைதி பேணுவோமாக.

அதிபர், ஆசிரியர்,
பாட சாலை அபிவிருத்திச் சங்கம்.
பழைய மாணவர் சங்கம்,
நலன் விரும்பிகள்.

நெல்லியடி,
கரவெட்டி.

### அவர் வழி தொடர்வோம்

தலவிசேடமான பின்னணியிலே யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி தளம் அமைத்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது.

அதன் வளர்ச்சிப் படிக்கற்களை மிக உன்னிப்பாகக் கவனிக்கும்போது கல்லூரி முதல்வர் திருமதி ச. சுந்தரலிங்கத்தின் தூண்டல் தரும் துலங்கலை யாவரும் அறிவர்.

கல்லூரிக்காகத் தம்மை அர்ப்பணித்த அவர் வகுத்த பாதையிலே மேன்மேலும் கல்லூரி வளர வாழ்த்துகின்றேன்.

ஈடுசெய்யமிக மிகச் சிரமமான அவரிடத்தை கட்டிக்காத்து கல்லூரி வளர என்னாலான பங்களிப்பைத் தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ச. கதிரவேற்பிள்ளை.
தலைவர்.
நலன் விரும்பிகள் சங்கம்,
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

### கூர்ப்பமை முதல்வர்

வடமராட்சிக் கல்வி வலயத்திலே வடமராட்சி மகளிர் கல்லூரி குறிப்பிடத்தக்க துறைகளில் எல்லாம் சாதனைகளைப் படைத்து வரும் புதியதோர் பெண்கள் கல்லூரி. இக்கல்லூரியின் துரித வளர்ச்சிக்கு அச்சாணியாக அமைந்தவர் அதிபர் திருமதி ச. சுந்தரலிங்கம். கல்லூரி வாழ்வுக்காகத் தம்மை அர்ப்பணித்த பெருமைக்குரியவர். அவர் தொடக்கி வளர்த்து வருகின்ற கல்விப்பணி சிறக்க வாழ்த்துகின்றேன். திருமதி ச. சுந்தரலிங்கம் நல்லன எல்லாம் பெற்று இன்புற்று வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சி. சிவராஜா
கல்விப் பணிப்பாளர்
வடமராட்சிக் கல்வி வலயம்,
புலோலி.

### புகழ்பூத்த அதிபர்

1970 இலிருந்து ஆசிரியராகவும் பின்பு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் அதிபராகவும் கடமையாற்றிய திருமதி சரோஜினி தேவி சுந்தரலிங்கம் 01—09—99 முதல் ஓய்வுபெற்றுள்ளார்.

இவர் இப்பாடசாலைக்குத் தன்னை அர்ப்பணித்துச் சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நான் இங்கு கடமையேற்றபோது தான் இப்பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்த ஐந்து அடிக் குத்துவிளக்கொன்றை ஒளிர்ந்தபடியே என்னிடம் ஒப்படைத்தார். தான் ஒளியேற்றிய பாடசாலை தொடர்ந்தும் ஒளிவீசவேண்டும் என்று எதிர்பார்க்கிறார் என்பது இதன்மூலம் தெளிவாகின்றது.

இவர் தன் குழந்தைச் செல்வங்களுடனும் உற்றார் உறவினருடனும் நீடூழிவாழ ஆண்டவனை வேண்டுகின்றேன்.

திருமதி வி. சுகுமாரன்
அதிபர்
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

(சி/9116)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### சோதிடம்

உங்கள் குறிப்பு, ஜாதகம், கைரேகை, நினைத்த காரியம், நோய்கள், திருமணம் போன்ற சகல பிரச்சினைகளும் தீர்த்து வைக்கப்படும். சோதிடம் பார்த்தல் தொடர்ந்து நடைபெறுகின்றது. தொடர்பு: சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (69418)

### கைரேகை

மெய்ஞ்ஞான முறைப்படி தெய்வீக அருளால் உங்கள் குறைகள் தீர்த்து வைக்கப்படும். தீராத நோயா, கிரக தோஷத்தால் கஷ்டமடைகின்றீர்களா? எதுவானாலும் தெய்வீக அருளால் குறைகள் தீர்க்கப்படும். தொடர்பு:— சி. சோதிநாகரத்தினம், மெய்கண்டான் வீதி, இளவாலை வடக்கு, இளவாலை. (பஸ் இலக்கம் 788 ) (69330)

### தவறிவிட்டது

இணுவிலிருந்து கே. கே. எஸ். வீதி வழியாக நல்லூர் சட்டநாதர் கோயில் வரை வரும் வழியில் ஒன்றரைப் பவுண் கைச்சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் த. மகேந்திரன் அண்ணா சனசமூக நிலையம், உடுவில் கிழக்கு இணுவில் என்னும் முகவரியில் ஒப்படைத்து சன்மானம் பெற்றுக் கொள்ளவும். [சி/ 9095]

வலன்ரைன் நீக்கிலஸ் குயின்ரன் ஆகிய எனது தேசிய அடையாளஅட்டை [781721000V], விசேட அ.அட்டை [0901025742], தொழில் அ.அட்டை மூன்றும் 27—9—99 மாலை ஸ்ரான்லி வீதிக்கும் பாஷையூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைத்துதவவும். செல்வர் ஹாட்வெயர்ஸ், 120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [69438]

தென் மட்டுவில் சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி புஸ்பராஜா கிரிஜா என்பவரது தேசிய அ. அட்டை (725821670 V), விசேட அ. அட்டை (091005959) இரண்டும் மட்டுவில் கல்வெட்டு சிவன் கோயிலில் 26 – 9 – 99 இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வாகையடிச் சந்தி, கணேஷ் கடையில் ஒப்படைத்துதவவும். (69429)

வல்லிபுரம் வேலாயுதபிள்ளை ஆகிய எனது விசேட அடையாள அட்டை (0907002697) கே. கே. எஸ் றோட், சுன்னாகத்துக்கும் மல்லாகம் சந்திக்குப் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க. செல்லத்துரை K. K. S. றோட், சுன்னாகம் வடக்கு, சுன்னாகம் (பூபாலசிங்கம் ஆச்சிரமம் அருகில்) என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (69417)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி புறோயிலர் மிகக் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 1] இல.31. மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு), 2] விதானை வளவு, பொன்னாலை வீதி, மானிப்பாய். (69284)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் (பாதிக்கோழி உட்பட) சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தினமும் காலை 7 மணி தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம். குறைந்த விலை. நுட்பமான நிறுவை, சுறுசுறுப்பான சேவை. அத்துடன் அடை முட்டையும் வாழைக்குட்டிகளும் (10/-) விற்பனைக்கு உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (69430)

### SPOKEN ENGLISH

இலக்கணம் இன்றிச் சுலபமான முறையில், விரைவாகக் கதை பயில (பாடசாலை மாணவர்களுக்குஇலக்கணம், வினாவிடை பயிற்சி தனிப் பிரிவாக) ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (69419)

### கலர் மீன்

கலர் மீன்கள், மீன் தொட்டிகளுக்குரிய அழகுப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:— A.அருளானந்தம் (குட்டி), 17, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (12 மணிக்குப்பின் தொடர்பு கொள்ளவும்.) (69350)

### தில்லை சோதிடம்

இந்தியாவில் கடலங்குடியில் சோதிடக் கலையைக் கற்றவரும் திரு. ஜி. பார்த்தசாரதியின் மாணவியுமான ஸ்ரீ அன்பு ஜெயவதனி என்பவரிடம் ஜாதகம் பார்த்தல், ஜாதகம்எழுதுதல், திருமணப் பொருத்தங்கள் பார்த்தல் போன்றவற்றைப் பார்த்து உங்கள் வாழ்வு நலம்பெற தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: அ. தில்லையம்பலம் (கரைப்பிட்டி விநாயகர் கோயில் அண்மை) அராலி தெற்கு, அராலி. (69288)

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பொறியியல் துறையில் தகைமையுள்ள தொழில் ஆலோசகராக அரசாங்கத் துறையில் வேலை பார்க்கும் 38 வயதுள்ள 7இல் செவ்வாயுடைய மணமகளுக்குப் பெற்றோர் வரன் தேடுகிறார்கள். நியாயமான சீதனம் கொடுக்கப்படும். விளம்பர இல.951, மே/பா உதயன். உடன் தொடர்பு கொள்ளவும். (69403)

### விற்பனைக்கு

5 வேம்பு, 1 பாலை உடன் விற்பனைக்கு உண்டு. உடன் பணம் செலுத்தி ஒரு வார காலத்துக்குள் அகற்றுபவர்களுக்கே கொடுக்கப்படும். ந. பாலசுப்பிரமணியம், இலுப்பையடி, வல்வெட்டி, (மக்கள் வங்கி அருகில்) (69414)

சாவகச்சேரி கண்டி வீதி, இலங்கை வங்கிக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட நான்கு கடைகளும் மேல் மாடி வீடும் விற்பனைக்கு உண்டு. தனித்தனியே பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு: ச. நாகராசா தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (சி/ 9105)

## வாழ்த்துகின்றோம்

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்தவரும்
சமூகத் தொண்டருமாகிய


**சண்முகம் ஏகாம்பரநாதன்**

அவர்கள் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதையிட்டு பாராட்டுவதுடன் அவர் பணி மேன்மேலும் தொடரவும் நீடூழி வாழவும் அன்புடன் வாழ்த்துகின்றோம்.

திரு. திருமதி இராஜகோபால்
உரும்பிராய் வடக்கு.

(69427)

## வாழ்த்துகின்றோம்



எமது சக அலுவலரான

**திரு. செல்லையா குமாரசிங்கம்**

அவர்கள்

சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதையிட்டு எமது மன மகிழ்வைத் தெரிவித்து அவரது சமூகப் பணி தொடர வாழ்த்துகின்றோம்.

மாவட்ட வைத்திய அதிகாரி
உத்தியோகத்தர், பணியாளர்.

மாவட்ட வைத்தியசாலை,
தெல்லிப்பழை.

[ 69420 ]

## ஒன்றுகூடல்

கொழும்புத்துறை, செப். 29

வலி. கிழக்கு பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடல் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் நடைபெறும்.

இந்த ஒன்றுகூடலில் சகல பாலர் பாடசாலை ஆசிரியர்களையும் ஏற்கனவே கேட்டுக்கொண்ட முழுமையான விவரங்களுடன் [வினாக்கொத்து] தவறாது சமுகமளிக்குமாறு யாழ். பிரதேச உள்ளூராட்சித் திணைக்களத்தின் தலைமைச் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் [திருமதி த. பாஸ்கரன் கேட்டுள்ளார். [இ-க-30]

## மல சல கூடம் திருத்தம்

வளலாய், செப். 29

இடைக்காடு மகாவித்தியாலய மல சல கூடங்களைத் திருத்தும் பணிகள் துரிதகதியில் நடைபெற்றுவருகின்றன.

மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்படும் இப்பணிக்காக இருபத்தெட்டு இலட்சம் ரூபாவை ஜி. ரி. இஸற் நிறுவனம் வழங்கியுள்ளது.

இந்தப் பாடசாலை கடந்தகால இராணுவ அனர்த்தத்தின் போது சேதமடைந்தது தெரிந்ததே. [இ-ரி-178]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

29 – 09 – 1999



அமரர்

**சசி கிருஷ்ணமூர்த்தி** (B.A.Cey.)

(செயலர், பனை அபிவிருத்திச் சபை)


அன்று எமக்கெல்லாம் ''கவனம்'' சொல்லிச் சென்றீரே!
இன்றுவரை நாம் உமைக்காணாது தேடி ''தவனம்''
இருந்துதவிக்கின்றோம்ஐயா!

உங்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டும்

குடும்பத்தினர்
9, மருதடிவீதி, யாழ்ப்பாணம்.

(69428)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**கணபதிப்பிள்ளை செல்வரத்தினம்**

(ஜேர்மனி)

தோற்றம் 13 – 06 – 1956
மறைவு 30 – 08 – 1999

ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள் நினைவு என்றென்றும் எங்கள் மனதில் இருந்து அகலாது.

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், தந்தை,
மாமா, மாமி,
சகோதரங்கள், மைத்துனர்கள்,
மருமக்கள், பெறாமக்கள்,

கைதடி தெற்கு,
கைதடி.

(69423)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் மீது படையினர் அம்பாறையில் கெடுபிடி

## முகைதீன் எம். பி. முறைப்பாடு

அம்பாறை, செப். 29

அம்பாறை மாவட்டம் — சம்மாந்துறை, வீரமுனைப் பகுதிகளில் வசிக்கும் தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் சீருடையினரால் காரணமின்றித் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டு வருகின்றனர் என திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யு. என். எம். முகைதீன் படைத்தரப்பிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

வீரமுனை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸாரும், விசேட அதிரடிப்படையினருமே இவ்வாறு இளைஞர்கள் மீதான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் எனவும் தனது முறைப்பாட்டில் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை —

மேற்படி சம்பவம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினரான யு. என். எம். முகைதீன் நேற்று முன்தினம் காரைதீவில் உள்ள விசேட அதிரடிப் படையினரின் முகாமுக்குச் சென்று உயர் அதிகாரிகளுடன் பேசியதாகவும் —

அச்சமயம் எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடை பெற மாட்டா என்று படைத் தரப்பில் உறுதி வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7.14)

# காட்டு யானைகளினால் திருமலையில் தொல்லை

திருகோணமலை, செப். 29

திருகோணமலை புறநகர்ப் பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை கடந்த ஒரு வாரமாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் இருந்து சுமார் 3 மைல் தொலைவில் உள்ள ஆத்திமேடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்குள் புகுந்த ஐந்து காட்டு யானைகள் பாடசாலையின் கூரைப் பகுதியைச் சேதப்படுத்தியதாகவும் —

பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் தப்பி ஓடியதின் மூலம் எந்த வகையான உயிரிழப்பும் ஏற்படவில்லை எனவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# நிர்வாக உதவியாளர் சேவை உருவாக்கப்பட வேண்டும்

## லிகிதர் சங்க யாழ். கிளை கோருகின்றது

நிர்வாக உதவியாளர் சேவை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று அரச சேவை லிகிதர் சங்கத்தின் யாழ். கிளை தனது தலைமைச் சங்கத்தைக் கோரியுள்ளது. அரச சேவையில் உள்ள லிகிதர்கள் எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அரச சேவை லிகிதர் சேவைச் சங்கத்தின் யாழ். கிளைச் செயலாளர் இ. தவராசா தலைமைச் சங்கத்துக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ இலங்கைச் சமூகத்தின் வாழ்க்கைத் தரத்துக்குப் பொருந்தாத வகையில் வறுமை நிலைக்கு எழுதுவினைஞர் தள்ளப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு நீதியான, முரண்பாடுகளற்ற சம்பளத் திட்டத்தையும் பதவி உயர்வுக்கான ஒழுங்கு முறைகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

★ எழுதுவினைஞர்களின் மிகக் குறைந்தளவு சம்பளத்தை ஆறாயிரத்து 650 ரூபாவாக்க வேண்டும்.

★ 2/97 ஆம் இலக்க நிர்வாக சுற்றறிக்கையினால் உருவாக்கப்பட்ட எழுதுவினைஞர்களின் சம்பள முரண்பாட்டை உடனடியாக நீக்க வேண்டும்.

★ வாழ்க்கைச் சுட்டெண் ஒன்றுக்கு ரூபா 10 வீதம் வழங்க வேண்டும்.

★ அரச லிகிதர் சேவையின் தீர்மானத்துக்கு இணங்க அரசாங்க சேவையின் புதிய கட்டமைப்பினையும் தேசிய சம்பளக் கொள்கையையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

★ பொது எழுதுவினைஞர் சேவையை நிர்வாக சேவையுடன் ஒன்றிணைக்க வேண்டும்.

★ பொது எழுதுவினைஞர் சேவையின் வகுப்பு ஒன்றில் 10 வருடங்கள் பூர்த்தி செய்தவரை அதிவிசேட தரத்துக்கு பதவி உயர்த்த வேண்டும்.

★ 1980 ஆம் ஆண்டு ஜூலை வேலை நிறுத்தத்தில் பங்குபற்றி வேலையை இழந்தவர்களுக்கு மீண்டும் வேலையை வழங்கவேண்டும்.

(இ-க)

# புளொட் குழுவினர் மட்டக்களப்பு வருகை

மட்டக்களப்பு, செப். 29

மட்டக்களப்பு மாவட்டத்திலும் புளொட் அமைப்பு தனது அரசியல் வேலைத் திட்டங்களை தற்போது மீண்டும் ஆரம்பித்துள்ளது

புளொட் அமைப்பின் இராணுவப் பிரிவுக்கும் அரசியல் பிரிவுக்கும் இடையிலான முரண்பாடுகள் காரணமாக மட்டக்களப்பில் புளொட் அமைப்பின் அரசியல் வேலைத்திட்டங்கள் முன்னர் ஸ்தம்பித நிலையை அடைந்திருந்தன.

கடந்த சில மாதங்களாகக் கொழும்பில் தங்கி இருந்த புளொட் அமைப்பின் மட்டக்களப்புப் பி ராந்தியப் பொறுப்பாளர் ராஜு மாமா உட்பட 25 பேர் கொண்ட பிரமுகர்கள் நேற்று முன்தினம் காலை மட்டக்களப்புக்கு வருகை தந்து தமது பொறுப்புக்களை ஏற்றுள்ளனர். [ஐ-ரி-21]

# பளை விஜயம்

தென்மராட்சி, செப். 29

பளைப் பிரதேசத்தில் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்படும் விவசாய செய்கைகளைப் பார்வையிட வடக்கு கிழக்கு மாகாண காணி, விவசாய அமைச்சின் செயலாளர் க. மார்க்கண்டுவும் அமைச்சின் உயர் அதிகாரிகளும் நாளை வியாழக்கிழமை பளைக்கு விஜயம் செய்யவுள்ளனர். [இ-117]

# பொது மக்கள் கொலையைத் தடுக்க அரசுக்கு அழுத்தம் தர வேண்டும்

## இந்து சமயப் பேரவை வேண்டுகோள்

சமயக் கோட்பாடுகள் மற்றும் பாரம்பரிய வாழ்க்கை முறைகள் ஆகியவற்றில் ஒத்த நன்மைகளைக் கொண்டுள்ள இந்துக்கள் மற்றும் பௌத்தர்கள் அநியாயமாகக் கொல்லப்படும் சம்பவங்கள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

இதுவிடயத்தில் மனித நேயம் படைத்த சகலரும் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு இந்து சமயப் பேரவை வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

புதுக்குடியிருப்பு மற்றும் ஒட்டுசுட்டான் போன்ற இடங்களில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் எந்த விதத்திலும் நியாயப்படுத்தக் கூடியவை அல்ல.

தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளை வழங்குவதற்கு அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னர் இடம்பெற்ற இனமோதல்களால் அப்பாவிப் பொது மக்கள் பெருமளவில் கொல்லப்பட்டதுடன் பலர் அங்கவீனமடைந்தும் பெரும் தொகையான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுமுள்ளன.

புதுக்குடியிருப்பு சம்பவம் என்றாலும் சரி, அம்பனைறச் சம்பவமாயினும் சரி அதற்கான முழுப் பொறுப்பையும் அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நாட்டைச் சரியான முறையில் வழி நடத்த வேண்டிய முழுப்பொறுப்பும் அரசாங்கத்திடமே உண்டு.

இலங்கையில் மாறி மாறி ஆட்சி செய்த சகல அரசாங்கங்களும் தமிழரின் நியாயமான உரிமைகளை வழங்கத் தவறிவிட்டன.

பிரச்சினைகளைத் தட்டிக் கழித்து ஒருவரை ஒருவர் குறை கூறும் கபடத்தனத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

பிரச்சினைகளுக்கு சமாதான முறையில் தீர்வுகாண்போம் எனக்கூறி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசு இதுவரையில் சாதித்தது என்ன?

மக்களைப் பீதி கொள்ளச் செய்து ஏக்கத்திற்கு உள்ளாக்கும் யுத்தத்தைத் தொடர்வதால் எந்தப் பயனையும் நாம் அடையப் போவது இல்லை.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்துகின்றோம் என்று கூறிக்கொண்டு அப்பாவிப் பொதுமக்களைக் குண்டு வீசித் தாக்குவது நிறுத்தப்பட வேண்டும் — என்றுள்ளது. (இ-ரி)

# செய்திக் கொத்து

### உரும்பிராய் சந்தை விரைவில் கட்டடத்தில்

வலி.கிழக்கு, செப்.29

தற்போது தனியார் காணி ஒன்றில் இயங்கி வரும் உரும்பிராய் பொதுச் சந்தை மீண்டும் புனரமைக்கப்பட்ட கட்டடத்திற்கு இடம் மாற்றப்படவுள்ளது எனவலி. கிழக்குப் பிரதேச சபையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பொதுச் சந்தை விரைவில் மக்களின் பாவனைக்கு விடப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. [ரி-180]

### மின் மாற்றி

யாழ்ப்பாணம், செப். 29

கொக்குவில் பகுதியில் மேலும் ஒரு மின்மாற்றி மின்சார சபையினரால் பொருத்தப்பட்டுள்ளது.

கொக்குவில் பகுதிக்கு இது வரை கொக்குவில் சந்திமற்றும் தாவடிச் சந்தி மின்மாற்றியிலிருந்தே மின் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

புதிய மின்மாற்றி பொருத்தப்பட்டுள்ளதால் கொக்குவில் பகுதிக்கான மின் விநியோகம் ஓரளவு சீரடைந்துள்ளது. சம்பியன் வீதி கே. கே. எஸ். வீதிச் சந்தியில்ஏற்கனவே இருந்த மின் நிலையத்தில் புதிய மின்மாற்றி பொருத்தப்பட்டுள்ளது. [இ-4]

### சிறுவர் பாதுகாப்புக் கலந்துரையாடல்

நவாலி, செப். 29

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 7 கிராம சேவையாளர் பிரிவுகளில் வாழும் சிறுவர்களின் பாதுகாப்புச் சம்பந்தமான கலந்துரையாடல் கூட்டம் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் வை. சத்தியராசா தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்துக்கு உயரப்புலம், சாவற்காடு, ஆனைக்கோட்டை, மானிப்பாய் தெற்கு, நவாலி கிழக்கு, வடக்கு தெற்கு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளிலுள்ள சிறுவர் பாதுகாப்புக் குழுவினர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

(இ-100)

### விரைவில் சமுர்த்தி வங்கிகள்

வலி தென்மேற்கு,செப்.29

வடக்கு —கிழக்கில் விரைவில் 21 சமுர்த்தி வங்கிகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாட்டை சமுர்த்தி இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர். எம், கே. இரத்னாயக்க மேற்கொண்டுள்ளார்.

அடுத்த வருடம் ஜனவரி முதல் யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி — சுபீட்சத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் போது — சமுர்த்தி வங்கிகள் மூலம் சுயதொழில் வாய்ப்புக் கடன், சேமிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

(இ-185)

### வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், செப். 29

யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கி, பாலியல் நோய்த்தடுப்புப் பிரிவு ஆகிய இரு பிரிவுகளிலும் நீண்ட வருடங்களாக நிரப்பப்படாதிருந்த சுகாதார பரிசோதகர்ளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் பயிற்சி முடித்து வெளியேறிய சுகாதாரப் பரிசோதகர்களான கே. சிவபாலராசா இரத்த வங்கிக்கும், ஜி. நக்கீரன் பாலியல் நோய்த்தடுப்புப் பிரிவுக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-15)

### திருட்டு

கொடிகாமம்நகர்ப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று சில தினங்களின் முன் இரவு வேளையில் இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு பெருந் தொகையான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடையின் பின்பக்கக் கதவு உடைக்கப்பட்டு உள்ளே புகுந்த திருடர்கள் அங்கிருந்த பொருள்களை எடுத்துச் சென்றுள்ளனர். [இ-117]

### இலவச திருமணப் பதிவு

ஒரே நாளில் 70 தம்பதியினருக்கு இலவச திருமணப் பதிவு சுதுமலை சாவற்கட்டு மகாத்மா சன சமூக நிலையத்தில் கடந்த 2ஆம் திகதி இடம் பெற்றது.

மானிப்பாய் லயன்ஸ் கழக ஆதரவில் இடம் பெற்ற இந்த வைபவத்தை வடமேற்கு விவாக பதிவாளர் கு. கணேசதாசன் நடத்தி வைத்தார்.

யாழ் மாவட்ட பிரதிப் பதிவாளர் எஸ். சதாசிவ ஐயர், லயன் செயல்திட்ட தலைவர் பி. தவபாலன் உட்பட பிரமுகர்கள் பலர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர். (இ-ரி-139)

### நன்கொடைப் பணம் கிடைக்கவில்லை

யாழ். மாவட்டத்திலுள்ளபதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு கடந்த 1998 ஆம் ஆண்டுக்கான அரச உதவி நன்கொடைப் பணம்இதுவரை வழங்கப்படவில்லை என்றும், இதனை விரைவில் அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் திருகோணமலையிலுள்ள வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரி உள்ளது

சம்மேளனத்தின் தலைவர் நா. போஜன் இந்த மகஜரை அனுப்பி வைத்துள்ளார்.


யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களுக்கு இந்த ஆண்டுக்கான அரச உதவி நன்கொடைக் கொடுப்பனவு அண்மையில் கிடைத்துள்ள போதிலும் கடந்த 1998 ஆம் வருடத்துக்கான உதவிநன்கொடைப் பணம் இதுவரை கிடைக்கவில்லை என்றும் இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரதி யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-135-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SCIENCE COLLEGE
Jaffna.
2000 A/L
PHYSICS
புலங்கள்
திரு. சம்பந்தன்: B. Sc.
புதன் 3—5
ஆரம்பம்: 29 – 09 – 99 (694 ை4)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 09 – 10 – 1967

மறைவு 29 – 09 – 1998

அமரர்

## இராஜரட்ணம் ராஜீ

எமது சங்கத்தில் எம்முடன் கடமையாற்றிய இ. ராஜீ 29-09-98 இல் விமான விபத்தில் அகால மரணமடைந்து இன்று ஒரு வருடம் பூர்த்தியாகின்றது.

அன்னாரையும் அவருடன் காலமாகிய தாயாரையும் சக பணியாளர்கள் யாவரும் மிக்க கவலையுடன் இன்று நினைவு கூர்ந்து அவர்களின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கக் கிளை.

[69292]

# வயோதிபர் கைது

யாழ்ப்பாணம், செப் 29

கடந்த 26 ஆம் திகதி மட்டுவில் தெற்கைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முருகன் வயிரவன் (வயது 77) என்ற வயோதிபரே கைது செய்யப்பட்டவராவார். (ஐ–ரி)

# நகரில் திருட்டு

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில், ஆஸ்பத்திரி முன்பாக உள்ள மூக்குக் கண்ணாடிக் கடை ஒன்றில் இருந்து சில தினங்களுக்கு முன் இரவு வேளையில் பெறுமதிமிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளன. [illegible] ஓடு பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் அங்கிருந்த மூக்குக்கண்ணாடிப் பிரேம்கள் மற்றும் பல் கட்டுவதற்கு வேண்டியபாவனைப்பொருள்கள் என்பனவற்றைத் திருடியுள்ளனர்.

இந்தத் திருட்டு தொடர்பாக யாழ் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ–15)

# நெல் விதைப்பு

சுழிபுரப் பகுதி வயல் சொந்தக்காரர்கள் நெல்விதைப்புக்கு மழையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

எனினும் சிலர் கடும் வெயிலின் மத்தியில் நெல் விதைப்புக்களைச் செய்து வருகின்றனர். (இ–28)

# இறுதி ஆண்டுப் பரீட்சைகள்

யாழ். பல்கலைக்கழக நுண்கலைமாணி, (இசை, நடனம்), இசைக் கலை மாணி, நாட்டியக் கலைமாணி ஆகிய கற்கை நெறிகளுக்கான இறுதி ஆண்டுப் பரீட்சைகள் ஒக்ரோபர் 25 ஆம் திகதி நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இந்தப் பரீட்சைகள் ஒக்ரோபர் 12 ஆம் திகதி நடைபெறும் என முன்பு அறிவிக்கப்பட்டது. (இ-ச)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் கணபதி கந்தையா (தம்பி)

தோற்றம் 06 – 12 – 1929

மறைவு 30 – 08 – 1999

தலைவா! எங்கள் தெய்வமான தலைவா,
அப்பா, எங்கள் அருமையான அப்பா,
மாமா, எங்கள் மதிப்பான மாமா,
அப்பப்பா, எங்கள் அன்பான அப்பப்பா,
அம்மப்பா, எங்கள் ஆசையான அம்மப்பா,
எங்கள் உள்ளம் உருகிடக்
கண்கள் கலங்கிட எம்மை
ஆறாத்துயரில் வாடவிட்டு
மீளாத் துயில் கொண்ட பெரியவரே

31 ஆம் நாளில் நீங்காத நினைவுகளுடன் தங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி – இராசம்மா
மகன் – மகாலிங்கம் [சங்கானை ப.நோ.கூ.ச]
மருமகள் – தங்கேஸ்வரி
மகள் – யோகேஸ்வரி [ஜேர்மனி]
மருமகன் – இரத்தினம் [ஜேர்மனி]
பேரப்பிள்ளைகள் – பிரதீபன் [ஜேர்மனி]
அனுஷா, அஜந்தா,
அனுப்பிரியா, அனிதா,
சுதர்சன் [ஜேர்மனி]
சுபாஜினி [ஜேர்மனி]
சுரேகா [ஜேர்மனி]
சுஜீனா [ஜேர்மனி]

மகாயோக மாளிகை,
சங்கானை.

(69391)

# 31 ஆம் நாள் நினைவலைகள்



செல்வி

## கிருஷாளினி தர்மகுலசிங்கம்

(யா/ நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை,
ஆண்டு ஐந்து மாணவி)

வசந்தம் 24–09–1989

இலையுதிர் 30 08–1999

சிங்காரி! நீ சிட்டாய்ப்
பறந்து எமது சிந்தை
குளிர வைத்தாய்!
பளிச் என்று மின்னிப்
பட்டென்று மறைந்து
எமது கனவைக் கலைத்து விட்டாய்!
எம் எதிர்காலம் பாலையாய்ப்
பரந்து கிடக்குதம்மா!
உன் கால் பதிந்த மண்ணில்
புரண்டு நிதம் அழுகின்றோம்
காலக் கறையானும்
உன் நினைவை அழிக்க முடியாதம்மா!

உன் ஆத்ம சாந்திக்கு நிதமும் பிரார்த்திக்கும்

அப்பா, அம்மா, அண்ணாமார்,
அக்காமார், சித்தப்பாமார், சித்திமார்,
மாமாமார், அத்தைமார், பாட்டிமார்.

''சந்திரபவனம்''
அல்வாய் தெற்கு,
அல்வாய்

(69409)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





## திரேசிற்றா அருள்மணி (பூமா)

அன்னை மடியில்: 01 – 10 – 1974

## இமாக்கியூலேற்றா பேர்னாண்டோ (செல்வராணி)

அன்னை மடியில்: 30 – 03 - 1974

கடலின் அடியில்: 29 – 09 – 1998

பல்கலை நந்தவனத்தில் புதுமலராய் பூத்துச் சிரித்த பூமா – செல்வா
பூவுலகம் படைக்கப் புறப்பட்டதென்ன?
தண்ணீரில் கரைந்த செய்திகேட்டு தரணியே அழுததம்மா!
பொங்கும் கடல் கூட முகாரி இசைத்ததம்மா!
கண்களில் கனவுடன் சென்ற உம் நினைவுகள் — எம்
உள்ளங்களில் ஆறாத்துயருடன் ………

இவர்களின் ஆன்ம ஈடேற்றத்துக்காக இன்று மாலை 5. 00 மணிக்கு நல்லாயன் நடு நிலையத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

நினைவுகளில்
மன்னார் மாணவர் ஒன்றியம்.
யாழ். பல்கலைக்கழகம்.

(69413)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அவசரம், ஆர்வம் ஆபத்தாகலாகாது

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது குறித்துப் பொதுவாகத் திருப்தியும் வரவேற்பும் தெரிவிக்கப்பட்டது. பாடசாலை அங்கு இயங்கத் தொடங்கியதால் அதனைச் சூழ உள்ள பிரதேசங்களில் மக்கள் மீளக் குடியமர்வதற்கான சாத்தியம் உண்டு என்றும் கருதப்பட்டது. வலி—வடக்கு மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கான ஒரு முன்னோடியாக இது அமையக்கூடும் என்று கூட நம்பப்பட்டது.

ஆனால் கல்லூரி தனது சொந்த இடத்துக்குச் சென்று இயங்கிய பதின்மூன்றாம் நாளே மாணவன் ஒருவன் மிதிவெடியினால் காயமுற்று விரும்பத்தகாத, எதிர்பார்க்காத சம்பவம் நடைபெற்றமை பொதுவாக எல்லோர் மனங்களிலும் பல கேள்விகளையும் ஒரு வகைப் பதற்றத்தையும், குறிப்பாக அந்தப் பாடசாலை மாணவர்களின் பெற்றோரிடம் பீதியையும் உண்டாக்கி உள்ளது.

குடாநாட்டின் முக்கிய பிரச்சினையாக, ஆபத்தான விவகாரமாக விளங்குவது கண்ணிவெடி மற்றும் மிதிவெடிகள் ஆங்கன மறைந்திருந்து பொது மக்களைத் தாக்கி உயிர், உடல் ஆபத்து விளைவிப்பதாகும்.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் வயல்களிலும் வீடுகளிலும் வீதிகளிலும் பரவலாக மிதிவெடிகளும் கண்ணிவெடிகளும் விதைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை உரிய முறைப்படி அகற்றி மக்கள் பாதுகாப்பாக அந்த இடங்களைப் பயன்படுத்த வகை செய்ய வேண்டியது அவசியம். இந்தப் பணியைச் செய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபை உதவ வந்திருப்பது பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

இப்போது கண்ணிவெடி, மிதிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள ஐ. நா. நிபுணர்கள் தமது வேலைகளைக் கட்டம் கட்டமாகவே செய்து வருகிறார்கள். மிதிவெடிகள், கண்ணிவெடிகள் உள்ளதாக இனங்காணப்பட்ட இடங்களிலிருந்து அவற்றை அகற்றுவதற்கு மட்டும் உத்தேசமாக மூன்று வருடங்கள் செல்லும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆகையால் வெடிப்பொருள்கள் விதைக்கப்பட்டுள்ள இடங்களுக்குச் செல்வது ஐ. நா. அதிகாரிகளின் வேலைத் திட்டத்துடன் ஒன்றிணைக்கப்பட்டதாக அமைய வேண்டிய தேவை உண்டு.

இல்லையேல் தெல்லிப்பழை வெள்ளைவாய்க்கால் பகுதியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற சம்பவம் போன்று ஆபத்தை விலைக்கு வாங்குவதாக முடியும். மிதிவெடி, கண்ணிவெடி மற்றும் வெடிப்பொருள்கள் மீட்கப்படாத பகுதிகளில் மக்கள் நடமாட்டத்துக்கு அனுமதிப்பது என்பது அவர்களின் உயிர்களோடு விளையாடும் செயலாகும்.

மக்களும் அவர்களின் நிறுவனங்களும் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. ஆனால் அதில் காட்டப்படும் ஆர்வமும் அக்கறையும்போலவே மக்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இது விடயத்தில் மிகவும் அவதானமாகவும் எச்சரிக்கையோடும் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் செயற்படுவது அவசியம். முறைப்படி செயலாற்றாமல் அவசரப்படுவதால் மக்கள் உயிருக்கு ஆபத்து விளையும் என்பதனைக் கருத்திற் கொள்வது முக்கியம்.

# கந்தபுராண கலாசாரத்தைபேணியவர்

# இலக்கிய கலாநிதி பண்டிதமணி

## பேராசிரியர் சண்முகதாஸ் உரை

கொழும்புத்துறை செப் 29

யாழ்ப்பாணக் கந்தபுராண கலாசாரத்தைப் பேணி வாழ்ந்த ஒரு பெருந்தகையாய்த் திகழ்ந்தவர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள்.

மட்டுவில் சந்திரமௌலீசர் வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற பண்டிதமணி நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக உயர்மட்ட ஆய்வுபீட பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இளைப்பாறிய அதிபர் ஆ. நடராசா தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் பேராசிரியர் தொடர்ந்து பேசுகையில்:

கலையுணர்வுப் பெருக்கோடு இலக்கண இலக்கியங்களைக் கற்பிப்பதுடன் மாத்திரமன்றிக் கேட்போரைக் கவரக்கூடிய இலக்கிய சொற்பொழிவாளராகவும் திகழ்ந்தார் பண்டிதமணி. அவர் பேச்சிலேயே அற்புதமான உவமைகளும், குட்டிக் கதைகளும் நகைச்சுவை மிக்கதாக இருக்கும்.

அவர் சைவ ஆசிரிய கலாசாலையில் கற்பித்த காலத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்குக் கற்பித்துள்ளார்—என்றார்.

ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் தனது உரையில் பண்டிதமணி ஐயா அவர்கள் நீண்டகாலம் சைவத்தையும் தமிழையும் வளர்க்க பல நூல்களையும் எழுதி வெளியிட்டார். இன்றும் அவரது நூல்கள் வெளிவராத நிலையில் கையெழுத்துப் பிரதியாக இருக்கின்றன — என்றார்.

பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை யாழ். பல்கலைக்கழக தமிழ்துறை தலைவர் சி. சிவலிங்கராஜா, இளைப்பாறிய அதிபர் அ. குமாரவேலு, இளைப்பாறிய ஆசிரியர் சுப்பிரமணியம் உட்பட பலர் உரையாற்றினார்கள். பண்டிதமணியின் பேர்த்தியார் செல்வி சதாசிவம் நன்றி நவின்றார். (இ-ரி-30)

# அமுக்க வெடியில் இறந்த குடும்பங்களுக்கு உதவி

வேலணை, செப் 29

வேலணைப்பகுதியில்டிசெம்பரில் இடம்பெற்ற அமுக்க வெடியில் சிக்குண்டு இறந்த மூவரின் குடும்பங்களுக்கு யுனிசெவ் அமைப்பினால் வருமான அதிகரிப்பு என்னும் திட்டத்தின் கீழ் தையல் இயந்திரம், ஒற்றை மாட்டு வண்டில்,ஆடுகள், கோழிகள் என்பன வழங்கப்பட்டன.

வேலணை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் செ.இரத்தினம் தலைமையில் இது தொடர்பான வைபவம் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யுனிசெவ் அமைப்பின் யாழ். மாவட்டப் பிரதிநிதி திருமதி பெனிபுறூன் மேற்படி உபகரணங்கள் மற்றும் கால்நடைகளைக் கையளித்தார். (இ-167)

# உதவிக் குருக்களாக நால்வர் அபிஷேகம்

வட்டுக்கோட்டை தென்னிந்தியத் திருச்சபை யாழ். ஆதீனத்தில் 4 திருச்சபை ஊழியர்களுக்கு உதவிக் குருத்துவ அபிஷேக விழா பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது.

அருட்திரு. பி. ஜெ. மேதர் அவர்களின் அருளுரையைத் தொடர்ந்து நால்வரும் உதவிக் குருக்களாக அபிஷேகம் செய்யப்பட்டனர்.

வண. ஏ. பி. தேவதாஸ் (சங்கானை),வண. எ.ஜிட்ஜூ சுதர்சன் (சண்டிலிப்பாய்), வண. எஸ். குகனேஸ்வரன் (வரணி), வண. டெய்சி ஆசீர்வாதம் [தெல்லிப்பழை] ஆகியோரே இந்த நால்வரும் ஆவார்.

மேற்படி நிகழ்வைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் ஒட்லி மண்டபத்தில் இடம் பெற்றன. [இ-185]

# தொண்டர் ஆசிரியர்கள் மகஜர் சமர்ப்பித்தனர்

யாழ்ப்பாணம், செப். 29

கல்வி வலயங்களில் தற்போது நடைபெறும் நேர்முகப்பரீட்சைகளுக்கு அழைக்கப்படாத தொண்டர் ஆசிரியர்கள் தமது பெயர் விவரங்களை மாகாணக் கல்வி அமைச்சைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர் எஸ். கமலநாதனிடம் சமர்ப்பித்தனர்.

சுமார் 250 ற்கு மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்டக் காரியாலயத்தில் இருந்து ஊர்வலமாகச் சென்று யாழ். கல்வி வலயத்தில் வைத்து தமது மகஜரைச் சமர்ப்பித்தனர்.

பட்டியல் விவரத்தை ஏற்றுக் கொண்ட கல்விப்பணிப்பாளர் வலய மட்டங்களில் அனுமதி பெற்று கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கு முதல் கட்டநேர்முகப் பரீட்சையும், ஏனைய தொண்டர் ஆசிரியர்களுக்கு இரண்டாம் கட்ட நேர்முகப் பரீட்சையும் நடைபெறும் எனத் தமக்குத் தெரிவித்ததாக தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதி தெரிவித்தார். [ரி]

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப்.29

வெற்றிக்கான திறன்கள் தொடர்பான இளைஞர் யுவதிகளுக்கான கருத்தரங்கு ஒன்று யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி எம். நடராஜசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

யாழ். றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் தனியார் துறையில் உயர் நிலை எய்தியவர்கள் தங்களுக்கு வழிகாட்டியாக அமைந்த திறன்கள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர்.

மேற்படி நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக பதிவாளர் கலாநிதி கே. குணராசா, புற மோட்டேஸ் என்ஜினியேர்ஸ் இயக்குநர் கே. பூரணச்சந்திரன், யூரோவில் இயக்குநர் எஸ். ராமதாஸ், யாழ் ப. நோ. கூ சங்கத் தலைவர் சி. வி.கே.சிவஞானம் ஆகியோர் கருத்துரை வழங்குவர். (இ-க)

# பிரிவுபசார விழாவும் பாராட்டும்

கோப்பாய், செப். 29

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியர்களாக கடமையாற்றி இடமாற்றமாகிச் சென்றவர்களை கௌரவிக்கும் முகமாக கடந்த 22 ஆம் திகதி பிரிவுபசார விழா நடைபெற்றது.

இதேவேளையில் இங்கு ஆசிரியர்களாகவும் அதிபர்களாகவும் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்றவர்களுக்கும் கடந்த 11 ஆம் திகதி சேவைநலன் பாராட்டு விழா நடத்தப்பட்டது. (இ-72)

# மருத்துவப் பரிசோதனையில் 110 பேருக்கு கண்ணில் பாதிப்பு

தென்மராட்சி,செப். 29

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் கைதடிப்பகுதி மக்களுக்கு கைதடி குருசாமி வித்தியாலயத்தில் நடத்திய மருத்துவப்பரிசோதனை களில் 110 பேருக்கு கண்ணில் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்களில் 38 பேருக்கு விழி வெண்படலத்தில் பூப்படர்வு ஏற்பட்டிருந்ததும் 27 பேருக்கு கண்ணில் பாதிப்பு ஏற்பட்டிருந்ததும் கண்டு பிடிக்கப்பட்டு மூக்குக்கண்ணாடி பெறுவதற்கு சிபார்சு செய்யப்பட்டது.

மேலும் சலரோகப் பரிசோதனையில் கலந்து கொண்டோரில்இருவருக்கு இந்நோய் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

வாய்ப்புற்று பரிசோதனையில் கலந்து கொண்ட 96 பேரில் ஒன்பது பேருக்கு முதலாம் நிலையில் இந்த நோய் இருந்ததும் 58 பேருக்கு பற்சொத்தை ஏற்பட்டிருந்ததும் கண்டு பிடிக்கப்பட்டது.

மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு செல்லுமாறு இவர்கள் அறிவுறுத்தப்பட்டதாக கழகச் செயலாளர் லயன் வி. வி. மகாலிங்கம் தெரிவித்தார். (இ-117)

# பிறரின் முன்னேற்றத்துக்காக தம்மை அர்ப்பணித்தலே உண்மைச் சேவை

## பாராட்டு விழாவில் உரை

வலி. கிழக்கு செப் 29

பிறருக்காக அவர்களுடைய முன்னேற்றத்துக்காக தன்னுடைய வாழ்வை அர்ப்பணிப்பவனே உண்மையான சேவையாளனாக விளங்க முடியும். குறிப்பாக கல்வியறிவில் பின்தங்கிய, பொருளாதார நிலைமைகளில் தாழ்வுற்றவர்களின் முன்னேற்றத்துக்கு வழி கோலும் வகையில் எமது செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அண்மையில் சமாதான நீதிவானாகநியமனம் பெற்ற எஸ். கே. தங்கவடிவேலுக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் அண்மையில் அப்பகுதி மக்கள் நடத்திய பாராட்டு விழாவில் உரையாற்றிய யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கிருஷ்ணசாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் ந. சிவகடாட்சம் தலைமையில் இடம் பெற்ற மேற்படி விழாவில் உதவி ஆணையாளர் பேசுகையில் —

நாம் எதை விதைக்கின்றோமோ அதைத்தான் அறுவடை செய்கின்றோம். அதே போன்று அன்பை விதைக்கும் போதும் அன்புதான் அறுவடையாகின்றது. மக்களுடன் அன்பாக இணைந்து சேவையாற்றினார் விழா நாயகன் தங்கவடிவேல். இன்று அதன் பலனை அவர் பெறுகிறார்— என்றார்.

சட்டத்தரணி கே.கேசவன் தமது உரையில், சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ள தங்கவடிவேலுக்கு நிறையக் கடமைகள் காத்திருக்கின்றன.

சமாதானம் என்பதை [illegible] இந்தக் காலகட்டத்தில் பல சச்சரவுகள், தலையிடிகள் உண்டு.

எனினும் எல்லாவற்றுக்கும் மேலாக சகல மட்ட மக்கள் மத்தியிலும் தாம் ஆற்றிய சமூக சேவைகள் மூலம் தனக்கென்று ஒரு முத்திரையைப் பதித்துள்ளார்— என்றார்.

தங்கவடிவேலு பதில் உரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் சி. தர்மராஜன், மாவட்ட விலை மதிப்பீட்டாளர், பா. பாலேந்திரன்உட்பட கிராம உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கருத்துரை நிகழ்த்தினர்.

ஆசியுரையினை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாசாரியசுவாமிகள், நயினை ஆதீன பிரதம குரு சு. முத்துக்குமாரசாமி குருக்கள், அருட்தந்தை தோமஸ் ஜோர்ஜ், அருட்தந்தை பிரான்சிஸ் டானியல் ஆகியோரும் நிகழ்த்தினர். [ரி-180]

### உதயவாக்கு

சாவு வருவதற்கு முன்னரே கோழை பல தடவைகள் இறந்து விடுகின்றான்.

— ஷேக்ஷ்பியர்

# நாளை

புரட்டாதி 13

வியாழக்கிழமை

திதி: பஞ்சமி

முற்பகல் 7.10 வரை

நட்சத்திரம்: ரோகிணி

பின் இரவு 1.49 வரை

கபிலஷஷ்டி விரதம்

சுபநேரம்: 7.32—9.02

ராகுகாலம்: 1.32—3.02

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், செப். 29

யாழ். குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்கு விமானம்மூலம்பயணம்செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் தொடர்ந்து வெளியாகி வருவது தெரிந்ததே.

இம் மாதம் ஐந்தாம் திகதி வரைக்கும் அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

(இம் மாதம் 15 ஆம் திகதி வரை விமானப் பயண அனுமதி பெற்றோரில் ஒரு பகுதியினரின் விவரங்கள் கடந்த 20 ஆம், 21 ஆம் திகதிகளில் பிரசுரிக்கப்பட்டன. மிகுதி பின்னர் வெளியிடப்படும்).

## சண்டிலிப்பாய்

(103428ஏ), (105244ஏ), (105298ஏ), [105298பி), [105850ஏ], [106058ஏ], (108607ஏ), (108704ஏ], [108704பி], (108822ஏ), [109089ஏ], [111044ஏ], [111905ஏ).

(111905பி), (111933ஏ], (112015ஏ), [112015பி[, (112102ஏ), (112102பி), (112102சி), (112583ஏ), (112583பி), (112583சி), (112583டி), (112583ஈ). (112761ஏ), (112761பி),

(112762ஏ), (112797ஏ), (112825ஏ), (112825பி), (112825சி), (112825டி)' (112837ஏ), (112837பி), (112837சி), (112852ஏ]. (112857சி), (112857டி), (112857ஈ), (112899ஏ), (112899பி[, (112916ஏ],

(112916பி], [112916சி], (112916டி), (112921பி), [112921சி), (112921டி), (112921ஈ), [112991ஏ), (113044ஏ), (113046ஏ), (113046பி), (113083ஏ), (113089சி), (113097ஏ), (113098ஏ), (113120ஏ),

(113120பி), (113147ஏ), (113147பி), (114586ஏ), (114601ஏ), (114653பி), (114767ஏ), (114778ஏ), (114778பி), (114778சி), (114797ஏ), (114800ஏ), (114800பி), (114834ஏ), (114888ஏ), (114903ஏ).

[114921ஏ], [114947ஏ], [114949ஏ], [114966ஏ], [114982ஏ], [114982பி], [117014ஏ], [117016ஏ], [117016பி], [117016சி], [117092ஏ[, [117092பி], [117138ஏ],[ 117126ஏ], [117147ஏ], [117240ஏ]. [117251ஏ[, [121181ஏ],

## கோப்பாய்

(101671ஏ), (101671 பி), (101742 ஏ), (104053 ஏ), (107712 ஏ), 107712 பி), (107712 சி), (107712 டி), (109613 ஏ), (109613 பி), (109774 ஏ), (109774 பி), (110019 ஏ), (110104 ஏ), (110167 ஏ), (110104 பி),

(110167 பி), (110170ஏ), (110188 ஏ), (110188 பி), (110188 சி), (110190 ஏ), (110190 பி), (110199 ஏ), (110200 ஏ), (110706 ஏ), (110745 ஏ), (110785 ஏ), (110789 ஏ), (110789 பி), (110794 ஏ), (110794 பி), (110794 சி), (110806 ஏ).

(110809 ஏ), (110815ஏ), (110817 ஏ), (110822 ஏ), (110822 பி), (110826 ஏ], [110826 பி, 110830 ஏ[, [110831 ஏ], ]110831 பி], [110838 ஏ], [110843 ஏ[, [110844 ஏ]. [110844 பி], (110844 சி]', [110845 ஏ], ]110848 ஏ], [110849 ஏ]. [110850ஏ[,

(110855ஏ), (110856 ஏ), (110857ஏ), (110857பி), (110858ஏ), (110863ஏ), (110869ஏ[. (110872ஏ), (110872பி), (110872சி), (110885பி), (110885சி), (110887ஏ), (110889ஏ), (110889பி), (110891ஏ), (110893ஏ),

(111002ஏ), (111002பி), (111005ஏ), (111007ஏ), (111007பி), (111015ஏ), (111019ஏ), (111019பி), (111019சி), (111020ஏ), (111020பி), (111020சி), (111021ஏ), (111024ஏ), 111031ஏ), (111035ஏ), (111035பி), (111035சி), (111066ஏ),

[111069ஏ], [111069பி[, ]111069சி], [111969டீ[, ]111069ஈ], [111069எவ்], [111069ஜி], [111085ஏ], [111115ஏ], [111115பி], [111124ஏ[, [111124பி], ]111131ஏ], 111131பி], [111137ஏ], [111140ஏ], [111140பி].

(111140சி), (111170ஏ), (111198ஏ), (111201ஏ), (111201பி), (111205ஏ), (116190ஏ), (116190பி), (116301ஏ), (116301பி), (116303ஏ), (116314ஏ), (116402ஏ), (116403ஏ), (116407ஏ), (116407பி).

(116407சி), [116606ஏ], [116606பி[, [116608ஏ], [116614ஏ], [116649ஏ]' ]116650ஏ], (116650பி), [116801ஏ[, [116801பி], [116801சி], [116802ஏ], [116803ஏ], [116809ஏ], (116809 பி).

## நல்லூர்

[096641ஏ], [096641பி]. ]099347ஏ], [104214ஏ], [104266ஏ], [104269ஏ], [104272ஏ], [104277ஏ], [104278ஏ], [104281ஏ], [104283ஏ[, [104284ஏ], [104285ஏ], [104286ஏ], [104287ஏ].

[104290ஏ], [10487?ஏ], [107714ஏ], [107714பி], [107748ஏ], [107748பி], [107749ஏ], [107749பி], [107149சி], [107757ஏ], [107774ஏ], [107774பி], [107774சி], [107790ஏ], [107791ஏ], [107791பி].

[107792ஏ], [109839ஏ], [109841ஏ], [109847ஏ], [109859ஏ], [109866ஏ], [109867ஏ], ]109869ஏ], [109898ஏ], [109948ஏ], [109968ஏ], [110043ஏ], [110043பி], [110044ஏ], [[110046ஏ], 110046பி], [110049ஏ].

[110134ஏ], [110136ஏ], [110136பி], [110136சி[, [110136டி], [110160ஏ]. [110160பி]. [110204ஏ], ]110212ஏ], [110230ஏ], [110239ஏ], [110240ஏ], [110241ஏ], [110258ஏ], [110259ஏ].

[110260ஏ], [110261ஏ], [110263ஏ], ]110268ஏ], [110270ஏ], [110271ஏ], [110273ஏ], [110275ஏ], [110280ஏ], [110283ஏ], [110289ஏ], [110293ஏ], [110300ஏ], [110314ஏ], [110315ஏ].

[110360ஏ], [110379ஏ], [110379பி], [110448ஏ[, [110471ஏ], [110473ஏ[, [110475ஏ], [110480ஏ[, ]116313ஏ], [116313பி], [116357ஏ], [116363ஏ], [116367ஏ], [116380ஏ].

(116388ஏ), (116413ஏ), 116418ஏ), (116419ஏ), (109154ஏ), (109154பி), (109154சி), (109154டி). (112429ஏ), (112613ஏ), (113811ஏ), (113835ஏ), (113835பி). (113988ஏ), (114036ஏ), (114152ஏ),

(114180ஏ), (114185 ஏ), (114185பி), (114223 ஏ), (114223பி), (114223 சி), (115787ஏ), (115931ஏ), (115931பி), (117918ஏ), (117918பி), (100185 ஏ), (100185பி), (100196ஏ), (100196பி), (102201ஏ),

[102201பி], [103509ஏ], [103550ஏ], [103550பி], [103550 சி[. [103559டி], [105978ஏ], [111710ஏ], [111710பி], [111791ஏ], [111791பி], [112163ஏ].

(112176ஏ), (112176பி), (112788ஏ), (112806ஏ), (112806பி), (112961ஏ), (112961பி), (113127ஏ), (114613ஏ), (114613பி , (114661ஏ), (114651பி), (114724ஏ), (114724பி), (114724சி), (114829ஏ), (114833ஏ), (115012ஏ), (117007ஏ), (117034ஏ), (117043ஏ) (117307ஏ).

## வேலணை

(110494ஏ)
(எஸ். எல்.என் 11542ஏ)
(எஸ். எல். என். 11619 பி), (எஸ். எல். என் 11699ஏ), (எஸ். எல். என் 11599பி), (எஸ். எல். என் 11724 ஏ), (எஸ். எல். என் 11740ஏ), (எஸ். எவ். என் 11741 ஏ), (எஸ். எல், என் 11742 ஏ ),

(எஸ். எல்.என். 11746ஏ) (எஸ், எல். என். 11746 பி), (எஸ். எல். என் 11748ஏ), (எஸ். எல். என் 11748பி), (எஸ். எல். என் 11748 சி), (எஸ். எல். என் 11752ஏ), (எஸ். எல் என். 11752பி), (எஸ். எல். என். 11752 சி), (எஸ். எல். என். 11755 ஏ), (எஸ். எல். என். 11756ஏ). (எஸ். எல். என். 11756பி), (எஸ். எல். என். 11766ஏ),

[எஸ். எல். என் 11767ஏ], [எஸ் எல். என் 11783ஏ], [எஸ் எல். என் 11813ஏ], [எஸ். எல். என் 11856ஏ]. [எஸ். எல். என் 11856பி], [எஸ் எல், என் 11856சி], ]எஸ் எல். என் 11856டி], [எஸ் எல். என் 11856ஈ], [எஸ். எல். என் 11887ஏ], [எஸ் எல். என் 11890ஏ], [எஸ். எல் என் 11926ஏ], [எஸ். எவ். என் 11926பி],

(எ . எல். என் 11926சி), (எஸ். எல். என் 11926டி), (எஸ். எல். என் 11927ஏ), (எஸ். எல். என் 11927பி), (எஸ். எல். என் 11927சி), (எஸ். எல். என் 11927டி), (எஸ். எல். என் 11935ஏ). (எஸ் எல். என் — ஸ்ரீலங்கா கடற்படை)

## தெல்லிப்பழை

(108906ஏ), (111024 ஏ), (111719 ஏ), [111719 பி], [112087 ஏ]. [112087பி], [112194 ஏ], [112194 பி], [112763 ஏ], (112763 பி], (111835 ஏ], (712835)பி,

(112873 ஏ), (112984ஏ), [112984 பி), (112984 சி], ]113043 ஏ), [113249 ஏ), [113249 பி), [113249 சி), (113249 டி], [114591 ஏ], [114683 ஏ], [115683 பி], [114683 சி),

[114684 ஏ), [114725 ஏ], (114786 ஏ), (114936 ஏ),

## தவறிவிட்டது

ஐயாத்துரை ஜெயக்குமார் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, கப்பல் ரிக்கற், கிளியறன்ஸ் அடிக்கட்டை என்பன 25-09-99 சனிக்கிழமை சங்கானையில் இருந்து சுழிபுரம் செல்லும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்துக்கு அறியத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஐயாத்துரை ஜெயக்குமார்
நிற்சாமம், சங்கானை.

(69433)

## சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் சங்கானை பிராந்தியசபை

## நீர் இறைக்கும் இயந்திரம் ஏல விற்பனை

சங்கானை பிராந்திய சி. க. கூ. சங்கங்களின் பாவனைக்கு வழங்கிய ஐந்து நீர் இறைக்கும் இயந்திரங்கள் எதிர்வரும் 3-10-99 ஞாயிற்றுக்கிழமை 10 மணியளவில் வட்டுக்கோட்டை மாவடிச் சந்திக்கு அருகில் (காலஞ்சென்ற டாக்டர் சொர்ணலிங்கத்தின் மருத்துவமனைக்கு அருகில்) உள்ள ஏல விற்பனை காரியாலயத்தில் விற்பனைக்கு விடப்படும்.

குறிப்பு: மேற்படி இயந்திரங்களை 01-10-99, 02-10-99 பி. ப. 3.00 — 6.00 மணி வரை காரியாலயத்தில் பார்வையிடலாம். ஏல விற்பனையில் கலந்து கொள்வோர் மீளளிக்கப்படும் வைப்பாக 500 ரூபாவை 3-10-99 ஞாயிறு 9.00 மணிக்கு முன் செலுத்தி பங்குபற்றலாம்.

பதில் செயலாளர்
சங்கானை பிராந்திய சபை.

[சி/9113]

## சமய சந்திதிகளில்

கொழும்புத்துறை, செப். 29

கிளாலிபுனிதமிக்கேல்ஆலய வருடாந்தத் திருவிழா இன்று புதன்கிழமை காலை திருப்பலி பூசை, நற்கருணை ஆராதனை, வழிபாடுகளுடன் இடம் பெறும்.

(க-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப், 29

உடுவில் புனித செபமாலை மாதாஆலய வருடாந்தத் திருநாள்நிகழ்வில்எதிர்வரும்2ஆம் திகதி நற்கருணை ஆசீர்வாதமும் வழிபாடும் நடைபெறும்.

இறுதி நாளான 3ஆம் திகதி திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதுடன் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம் பெறும்.

(க-15-30)

★ ★ ★

யாழ்ப்பாணம். செப். 29

நாகர் கோவில் பூர்வீக நாக தம்பிரான் ஆலய தீர்த்தோற்சவ நிகழ்வுகள் இன்று ஆரம்பமாகும்.

பகல் நிகழ்வுகள் காலை 10 மணிமுதல் பிற்பகல் 6 மணிவரையும் இடம்பெறும்.

இரவு நிகழ்வுகள் இரவு 8 மணிமுதல் ஆரம்பமாகி நாளை வியாழக்கிழமை அதிகாலை 5. 30 மணிக்கு எம்பெருமான் சமுத்திரத்துக்குப் புறப்படுவார்.

[க-173]

## வாழ்த்துகின்றோம்

27-09-99 அன்று யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமிகு எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட ஆலய பொதுச்சபை உறுப்பினரும், சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க பொதுச்சபை உறுப்பினரும் சாவகச்சேரி நகரைச் சேர்ந்தவருமான



**திரு. M. P. ஷண்முகநாதன்**

அவர்களை இதய பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

அருள்மிகு ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய பரிபாலன சபை,

ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்

சாவகச்சேரி. (சி/9114)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட கிரிக்கெட் அணி;
# முதற்கட்டமாக 22 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், செப். 29

விரைவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் — வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு உட்பட்ட — மாவட்டங்களுக்கு இடையிலான — கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் யாழ். மாவட்டக் கிரிக்கெட் அணியைத் தெரிவு செய்யும் தேர்வுப் போட்டிகள் விரைவில் நடைபெறவிருக்கின்றன.

'மிட்சுயி — வி. எஸ். பி' வெற்றிக் கிண்ணத்துக்கான இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்ட அணிகள் பங்குபற்ற இருக்கின்றன யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் இச்சுற்றுப் போட்டிக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் யாழ் மாவட்ட அணியைத் தெரிவு செய்வதற்காக யாழ். மாவட்டத்தின் சிறந்த 22 வீரர்களை முதற்கட்டமாக யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் தேர்வு செய்துள்ளது. அவர்களின் விவரம் வருமாறு;

யாழ், பல்கலை வி, க.

ஆர். வரதன், என். சுதேஸ்குமார், எஸ். மகேந்திரராஜா, ஆர். கபிலன், கே. சசிகரன்.

ஜொலி ஸ்ரார்ஸ் வி. க.

என். சிவராஜா, எஸ். முரளி, எஸ். கைலேஸ்வரன்.

கொக்குவில் வி. க.

கே. சபாநாத், கே. சுதாகரன்.

மானிப்பாய் பரிஷ் வி. க.

ஜே. வீரசிங்கம், எஸ். பாஸ்கரன், பி. சுபாஸ்கரன், ரி. ஜெயதீபன்.

சென்றலைட்ஸ் வி. க.

என். நிஷாந்தன், எஸ். சுதர்ஷன்.

ஜொனியன்ஸ் வி. க.

ஏ. ரி. அரவிந்தன், ஏ. ரி. கௌரிபாகன், பி. சஞ்சீவ்.

பற்றிஷியன் வி, க.

என். நிஷாந்தன்.

யூனியன் வி. க.

என். தினேஷ்

யங் ஸ்ரார் வி. க.

ரி. பிரகாஷ்

இந்த 22 வீரர்களையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு விளையாட்டு உபகரணங்களுடன் யாழ். மத்திய கல்லூரியில் மாவட்ட பயிற்றுநர் வி. கே. சண்முகலிங்கத்தைச் சந்திக்குமாறு யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் கேட்டுள்ளது. (உ-ரி)




# உதைபந்தாட்ட நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 29

வலிகாமம் கல்வி வலயம் சண்டிலிப்பாய் பிரிவு பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் நடைபெறும் 14 வயதுப் பிரிவினருக்கான ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் பின்வருமாறு:

★ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் பண்டத்தரிப்பு ஜசிந்தா

★ யானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மாதகல் சென் ஜேம்ஸ்.

[உ-ரி-90]

★ ★ ★

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

16 வயதுப் பிரிவு

★ இமையாணன் அ.த.க. பாடசாலை எதிர் ஞானாசிரியர் கல்லூரி (நெல்லியடி ம.ம.வி. மைதானத்தில்)

★ சிதம்பரம் கல்லூரி எதிர் திரு இருதயக் கல்லூரி [திக்கம் மைதானத்தில்]

18 வயதுப் பிரிவு

★ விக்கினேஸ்வராக் கல்லூரி எதிர் ஞானாசிரியர் கல்லூரி (நெல்லியடி ம. ம. வி. மைதானத்தில்)

★ சிதம்பராக்கல்லூரிஎதிர் இமையாணன் அ.த.க. பாடசாலை (திக்கம் மைதானத்தில்) (உ-ரி)

★ ★ ★

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஈ.ஆர். போக்குவரத்துச் சேவை நிறுவனத்தின் ஆதரவில் பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அநுசரணையுடன் நடத்தும் வடமராட்சி ரீதியிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் திக்கம் முனை மைதானத்தில் இடம்பெற உள்ள ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணிக்கு — அல்வாய் நண்பர்கள் வி. க. எதிர் உதயதாரகை வி. க.

★ மாலை 5 மணிக்கு — கழுகுகள் வி. க. எதிர் டயமன்ஸ் வி. க. [உ-ரி]

★ ★ ★

யாழ். உதைபந்தாட்ட லீக் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் — லீக் முறையில் நடத்தும் — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற உள்ள ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மாலை 4.00 மணிக்கு— கொய்யாத்தோட்டம் ஐ. க. எதிர் அரியாலை ஐ. க.

மாலை 5.00 மணிக்கு — சென். நிக்கிளஸ் வி. க. எதிர் யுத்ஈாமல் வி. க. (ரி)

# 15 வயது கிரிக்கெட் அணியும் யாழ். மாவட்ட ரீதியில் தெரிவு

## மாவட்ட, தேசிய மட்டத்தில் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப். 29

அகில இலங்கை ரீதியில்— பிராந்திய மட்டத்தில்—நடைபெறவிருக்கும் பதினைந்து வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் யாழ். மாவட்ட கிரிக்கெட் அணியும் விரைவில் தெரிவு செய்யப்படவிருக்கின்றது.

யாழ். பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஆலோசனையுடன் யாழ். மாவட்டக் கிரிக்கெட் சங்கம் இந்த அணியை விரைவில் தெரிவு செய்யவிருக்கின்றது.

இச்சுற்றுப் போட்டி முதற்கட்டத்தில் பிராந்திய ரீதியில் அப்பிராந்தியத்துக்கு உட்பட்ட மாவட்டங்களுக்கு இடையில் லீக் முறையில் நடைபெறும்.

வடக்கு—கிழக்குப் பிராந்தியத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்ட அணிகள் முதலில்லீக் முறையில்மோதும் பின்னர் அந்தப் பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு—கிழக்குப் பிராந்திய அணி தெரிவு செய்யப்பட்டு தேசிய ரீதியில் விலகல் முறையில் நடத்தப்படும் இறுதிச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும்.

வடக்கு—கிழக்குப் பிராந்தியத்துக்கு உட்பட்டமாவட்ட மட்ட-ஆட்டங்கள்எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாக இருப்பதால் யாழ். மாவட்ட அணியை உடனடியாகத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன என்று யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத் தலைவர் ஆர். இரஜீவன் தெரிவித்தார்.

இந்த அணியைத் தெரிவு செய்வதற்கு யாழ். பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஆலோசனை பெறப்படும் என்று தெரிவித்த அவர், இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் 15 வயதுக்கு உட்பட்ட தகுதியுடைய— எவரும் யாழ் அணியில் இடம் பெறமுடியும் என்றும் கூறினார்.

அணியைத் தேர்ந்தெடுப்பதற்கான தெரிவுகள் மற்றும் பயிற்சிகள் அடுத்து வரும் தினங்களில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-5)

## துயரடைகின்றோம்

### ஜேக்கப் பெனடிக்ற்

29—09—1998 இல் விமானத்தில் பயணம் செய்து காணாமற் போன எங்கள் குடும்ப உறுப்பினர் ஜேக்கப் பெனடிக்ற் (நவாலி தெற்கு) அவர்களின் பிரிவையிட்டு கவலையடைகின்றோம்.

தாய், சகோதரர்கள், மருமக்கள், உறவினர்கள்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

[69441]

## இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவு
## சான்றிதழ் வழங்கும் வைபவம்

(இரண்டாவது அமர்வு)

வடக்கு – கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர்

**திரு. சுந்தரம் டிவகலாலா**
அவர்கள்

கலந்து சிறப்பித்து சான்றிதழ்களை வழங்குவார்.

காலம்: 30 – 09 – 1999 வியாழக்கிழமை
காலை 8.30 — 9.30 மணி

இடம்: கோப்பாய் ஆசிரிய கலாசாலை மண்டபம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வைத்திய கலாநிதி வை. தியாகராசா,
தலைவர்

இ. மயில்வாகனம்.
செயலாளர்.

(சி/9115)

# தென்னாபிரிக்கா வெற்றி

நைரோபியில் நான்கு நாடுகள் பங்குபற்றும் எல்.ஜி கோப்பைக்கான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்றுத் தென்னாபிரிக்க அணி ஸிம்பாப்வே அணியை ஒன்பது விக்கெட்டுகளால் வென்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸிம்பாப்வே அணியை முதலில் துடுப்பாட அழைத்தார்.

அற்புதமான அடித்தளத்தை இட்ட ஸிம்பாப்வே ஒரு கட்டத்தில் இரண்டு விக்கெட் இழப்புக்கு 170 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆனால் அதன் பின்னர் மளமளவென்று விக்கெட்டுகள் சரிய அது 47.4 ஓவர்களில் 216 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

சிறப்பாகத் துடுப்பாடிய தொடக்க ஆட்டக்காரர் க்ரான்ட் ப்ளவர் 91 ஓட்டங்களையும் நீல் ஜோன்ஸன் 34 ஓட்டங்களையும் பெற்றனர். தென்னாபிரிக்கத் தரப்பில் போல் அடம்ஸ், டான்ஸனும் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 35 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை எட்டிக் கொண்டது. (உ-ரி)

## கரப்பந்தாட்டம்

யாழ். மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கம் 'உதயன்' நிறுவனத்தின் அநுசரணையுடன் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று யாழ். கரப்பந்தாட்டச் சங்கத்தின் நல்லூர் மைதானத்தில் ஆரம்மாக உள்ளது.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு;-

★ பிற்பகல் 3 மணிக்கு - யாழ். பல்கலைக்கழகம் எதிர் தோப்பு இளைஞர் வி. க.

★ 4மணிக்கு—இந்துஇளைஞர் கழகம் எதிர் சென் அன்[illegible] (உ-ரி)

## 'சாவ்' போட்டியின் 200 மீற்றர் ஓட்டம்:
# சுஸந்திகாவின் சாதனையை முறியடித்த தமயந்தி தர்ஷா!

காட்மண்டு, செப். 29

இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுஸந்திகா ஜெயசிங்க 1995 இல் இருநூறு மீற்றர் ஓட்டத்தில் நிலைநாட்டிய தெற்காசிய சாதனையை இலங்கையின் இளம்புயல் தமயந்தி தர்ஷா நேற்று முறியடித்தார்.

நேபாளம் தலைநகர் காட்மண்டுவில் தற்போது நடைபெற்றுவரும் தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் ('சாவ்') நான்காம் நாளான நேற்றே புதிய சாதனை நிலைநாட்டப்பட்டது.

சுஸந்திகா ஜெயசிங்கவின் 22 95 செக்கன் என்ற சாதனையை 22.73 செக்கன்களில் ஓடிமுடித்து தர்ஷா முறியடித்தார்.

நேற்று இலங்கை ஒரு தங்கப் பதக்கத்தையும் நான்கு வெள்ளிப் பதக்கங்களையும் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்றது.

இதுவரை நடந்து முடிந்த போட்டிகளில் 37 தங்கப் பதக்கங்களைப் பெற்று இந்தியா தொடர்ந்து முதலிடத்திலும் 14 தங்கப் பதக்கங்களைப் பெற்று நேபாளம் இரண்டாம் இடத்திலும் 9 தங்கப் பதக்கங்களைப் பெற்று இலங்கை மூன்றாம் இடத்திலும் உள்ளன. (உ-ரி)

## வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், செப். 29

அரியாலை சனசமூக நிலையம் தனது 50 ஆவது பூண்டு நிறைவை ஒட்டி ஈ. எஸ். பேரம்பலம் சக நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இன்றைய முதலாம் நாள் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு;

★ மாலை 3. 30 மணி பாடும்மீன் வி. க. எதிர்பமிலியன்ஸ் வி. க.

★ மாலை 4. 30 மணி சென்நிக்லஸ் வி. க. எதிர் சென் அன்ரனீஸ் வி. க.

(உ-ரி)

## விளையாட்டு

சண்டிலிப்பாய், செப். 29

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையேயான —பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் தற்போது மகாத்மா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தப்பட்டு வருகின்றன

உதைபந்தாட்டம், கிரிக்கெட், கரப்பந்தாட்டம் ஆகியவை ஏற்கனவே நடந்து முடிந்துவிட்டன எனவும்—

தற்போது மெய்வன்மைப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன எனவும்—

விளையாட்டு அலுவலர் எம்.ஆர். மோகனதாஸ் தெரிவித்தார்.

[உ-ரி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org